பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 27 சனிக்கிழமை (12.09.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 290

# மேற்கு நாடுகள் விமர்சிப்பதை நிறுத்திவிட்டு இலங்கையின் அபிவிருத்திக்கு உதவவேண்டும்

## புலிகளின் பிரசாரத்துக்கு எடுபடக்கூடாது என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, செப்ரெம்பர் 12

மேற்குலக நாடுகள் இலங்கையை விமர்சனம் செய்வதை நிறுத்திவிட்டு இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்று இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்குலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை விடயத்தில் மேற்குலக நாடுகள் இரட்டை வேடம் பூண்டுள்ளன என்று குற்றஞ்சாட்டியிருக்கும் அவர், அந்த நாடுகள் இலங்கை மீது பூரண நம்பிக்கையும், விசுவாசமும் வைத்திருக்கவேண்டும் என்றும், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரசார நடவடிக்கைகளுக்கு எடுபடக் கூடாது என்றும் கோரியுள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)



## தயாமாஸ்ரரும் ஜோர்ஜ் மாஸ்ரரும் நேற்று நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்

கொழும்பு, செப். 12

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஊடக இணைப்பாளராக இருந்த தயா மாஸ்ரர் (சுப்பிரமணியம் தயாநிதி), மொழி பெயர்ப்பாளர் ஜோர்ஜ் மாஸ்ரர் (வேலுப்பிள்ளை குமாரு பஞ்சாட்சரம்) ஆகிய இருவரும் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தால் நேற்று நிபந்தனைப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கொழும்பு பிரதான நீதிவான் நிஸந்த ஹப்பு ஆராச்சி, தலா 25 லட்சம் ரூபா பெறு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி அகதிகளைப் பராமரிப்பதற்கு காலவரையறையின்றி நிதிவழங்கமுடியாது

### கூடியவிரைவில் விடுவிக்க ஐ.நா. வலியுறுத்து

கொழும்பு, செப். 12

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த மூன்றுலட்சம் மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள மனிக்பாம் முகாமுக்குத் தன்னால் காலவரையின்றி தொடர்ச்சியாக நிதி வழங்க முடியாதென ஐ. நா. சபை தெரிவித்திருப்பதாக பி.பி.சி.செய்திச்சேவை குறிப்பிட்டுள்ளது.

பி.பி.சி. செய்திச் சேவை இதுதொடர்பில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

(16 ஆம் பக்கம் பார்க்க)

## 'யுனிசெவ்' பேச்சாளருக்கு பரதுகாப்பு அச்சுறுத்தல்

கொழும்பு, செப். 12

''எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் சிரேஷ்ட உயரதிகாரிகளில் ஒருவரும், யுனிசெவ் அமைப்பின் இலங்கைக்கான பேச்சாளருமான ஜேய்ஸ் அல்டெருக்கு தொலைபேசி மூலம் அவரின் பாதுகாப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

# 'சனல்-4' வீடியோக் காட்சி பொய்யானது; மன்னிப்புக் கோரவேண்டும் என அரசு அறிவிப்பு

## இல்லையேல் கடும் நடவடிக்கை என்கிறார் சமரசிங்க

கொழும்பு, செப். 12

'சனல் - 4' நிறுவனத்துக்கு இலங்கை அரசால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள விஞ்ஞான ரீதியில் பொய்யென நிரூபிக்கப் பட்டுள்ள வீடியோ காட்சியை அப்படியே ஒளிபரப்பி, ஏற்கனவே ஒளிபரப்பிய காட்சி தொடர்பில் அந்நிறுவனம் இலங்கை அரசிடம் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் என்று அரசு நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தது.

அவ்வாறு செய்யாதுவிட்டால் அந்நிறுவனத்துக்கு எதிராக இலங்கை அரசு மாற்று வழிகளில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அரசு எச்சரித்தது.

அதேபோல், பி.பி.ஸீ., சி.என்.என். மற்றும் அல் - ஜெஸீரா போன்ற தொலைக் காட்சிகளும் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் மிகவும் பொறுப்புடன் செயற்படவேண்டும் என் றும் அரசு கேட்டுக்கொண்டது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற 'சனல் - 4' ஒளிபரப்பிய சர்ச்சைக்குரிய வீடியோ காட்சி



(16 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவிலிருந்து ஒன்பது பஸ்களில் 568 பேர் நேற்றிரவு கைதடி விடுதி வந்து சேர்ந்தனர்

யாழ்பாணம், செப்.12

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் உள்ள அகதிமுகாம்களில் தங்கியுள்ளவர்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 568 பேர் நேற்று ஏ-9 பாதையூடாக ஒன்பது பஸ்களில் இங்கு அழைத்து வரப்பட்டனர்.

யாழ்.மாவட்டத்தில் முதற்கட்டமாக மீள்குடியமர்த்து வதற்காக இனங்காணப் பட்ட 6,833 பேரில் 568 பேர் அழைத்து வரப்பட்டு கைதடி சித்த ஆயுள்வேத வளாக

(16 ஆம் பக்கம் பார்க்க)



வவுனியாவில் இருந்து வந்த அகதிகளை அரச அதிபர் பார்வையிடும்போது எடுக்கப்பட்ட படங்கள்.

## பாதுகாப்பற்ற பிரதேசங்களுக்குச் செல்வதையும் சந்தேகத்துக்கு இடமான பொருள்களைத் தொடுவதையும் தவிர்க்குக

### இராணுவத்தினர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.12

பாழடைந்த வீடுகளுக்கு உள்ளும், பாதுகாப்பற்ற பிரதேசமாகப் படையினரால் அடையாளப் படுத் தப்பட்ட இடங்களுக்குள்ளும் பிரவே சிப்பதையும் சந்தேகத்துக்கிடமான பொருள்களைத் தொடுவதில் இருந்தும் தவிர்த்துக்கொள்ளுங்கள். சந்தேகத் துக்கிடமான பொருள்கள் குறித்து அருகில் இருக்கும் இராணுவ முகா மிற்கு உடனடியாக அறிவியுங்கள்.

இவ்வாறு 51ஆவது படையணித் தலைமையகம் மக்களிடம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக படையணித் தலைமை யகத்தால் விடுக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

(15 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்





மகாகவி சுப்பிரமண்ணிய பாரதியார் நினைவு தினத்தையொட்டி நல்லூரில் அமைந்துள்ள பாரதியாரின் நினைவுத் தூபியில் விசேட நிகழ்வு இடம்பெற்றது.

நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் பாரதியாரின் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்துவதையும், தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் எஸ்.ஜெபநேசன் அடிகள் பாரதியாரின் சிலைக்கு மலர்மாலை அணிவிப்பதையும், யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவன மாணவர்கள் நிகழ்வில் கலந்து கொள்வதையும் படங்களில் காணலாம்.

# தீவுப்பகுதிப் போக்குவரத்தை சீராக்க பண்ணைப் பால புனரமைப்பு விரைவில் ஆரம்பம்

## யாழ்.அரச அதிபர் தகவல்

நல்லூர். செப் . 12

பண்ணைப்பாலத்தின் புனரமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

யாழ் செயலகத்தில் ஜெய்க்கா நிறுவனப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அரச அதிபர் இந்தத் தகவல்களை தெரிவித்தார்.

தீவுப்பகுதி விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளுக்கும் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கும் விவசாய வீதிகளும் பிரதான போக்குவரத்துப் பாதைகளும் சீரமைக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். அத்துடன் பண்ணைப்பாதை துரிதமாக புனரமைக்கப்பட வேண்டும் எனவும் விவசாயிகள் கேட்டுக்கொண்டனர்.

இதற்குப் பதில் அளித்த அரச அதிபர் கணேஷ் பண்ணை வீதி தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சருடன் பேசியுள்ளதாகவும் விரைவில் அதனைப் புனரமைக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் 2010இல் இந்தப்பாலம் புனரமைக்கப்பட்டு விடும் எனவும் குறிப்பிட்டார். (01-50-111)

# வலி.வடக்கு பிரதேச சந்தைகளிலிருந்து 2கி.மீற்றர் சுற்றாடலில் மரக்கறி விற்பனைக்குத் தடை

யாழ்ப்பாணம், செப்.12

வலி.வடக்குப் பிரதேசசபை சந்தைகள் அமைந்துள்ள பகுதியில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் சுற்றாடலில் மரக்கறிவகைகள் விற்பனை செய்வதற்கு பிரதேசசபையினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வலி.வடக்குப் பிரதேச சபைக்கு சொந்தமான சந்தைகளின் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்யும் முகமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்ற சட்டத்துக்கு அமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. இது சம்பந்தமாக சபையின் ஆலோசனைக் குழுக்கூட்டத்திலும் ஆராயப்பட்டு ஆலோசனை சபை உறுப்பினர்களினாலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.(1-68)

# செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப்.12

தேசிய கல்வி நிறுவகத்தின் ஏற்பாட்டில் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் தமிழ் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 15, 16, 17 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

# தென்மராட்சி நடமாடும் சேவையில் 41 பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு

யாழ்ப்பாணம், செப்.12

தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடமாடும் சேவையில் 41 பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காணப்பட்டது.

வலயக் கல்வி அலுவலகத்துக்கு கிடைத்த 75 முறைப்பாடுகள் நடமாடும் சேவையில் முன்வைக்கப்பட்டன. வலய மட்டத்தில் செய்யவேண்டிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டதுடன் ஏனைய 34 முறைப்பாடுகளும் மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகளால் எடுத்துச் செல்லப்பட்டன.

மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா, உதவிக் கல்விப் பணிப்பாளர் பொன்னம்பலம் ஆகியோர் நடமாடும் சேவையில் கலந்துகொண்டனர். (1-207)

# யாழ். இந்துவில் திங்கள் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், செப்.12

யாழ். இந்துக் கல்லூரியில் நாளை மறுதினம் நடைபெறவுள்ள நடமாடும் சேவை நிகழ்வில் கலந்துகொள்வதற்காக யாழ். கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் ஆகியோரை அன்று காலை 8.15 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

(01)

## மனம் நிறைந்த நன்றிகள்



புனித அடைக்கல அன்னை ஆலய வருடாந்த திருவிழாவை முன்னிட்டு அன்னையின் திருசொரூப பவனி வரும் பாதையினை துப்புரவு செய்து மின்விளக்குகளை இணைத்து தந்து மற்றும் நீரினை பாதைக்குத் தெளித்து உதவி செய்தமைக்காக சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ திரு . K.N. டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் அவரோடு உறுதுணையாக நின்று உழைத்து வரும் மாநகர உதவி மேயர் திரு.இளங்கோ (றீகன்) அவர்களுக்கும் புனித அடைக்கல அன்னை ஆலய பங்கு மக்களின் மனம் நிறைந்த நன்றிகள். மேலும் அவர்களின் பணி வாழ்வு சிறப்புற்று நீடூழி வாழ அன்னையின் ஆசியையும் வேண்டி நிற்கின்றோம்.

பங்கு தந்தை, பங்கு மக்கள், யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

NP xx - xxxx ஆங்கில இலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள Indian ரக கார் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 9041565 (88790)

## மரண அறிவித்தல்கள்



### சுப்பிரமணியம்·கோடீஸ்வரன்

(ஓய்வுபெற்ற பிரதம தபால் அதிபர், யாழ்ப்பாணம்)

கைதடி தெற்கு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சுப்பிரமணியம் கோடீஸ்வரன் 09-09-09 புதன்கிழமை காலமானார். அன்னார், கைதடியைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம்-தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், வெள்ளாம்போக்கட்டி கச்சாயைச் சேர்ந்த, காலஞ்சென்ற மயில்வாகனம் கனகம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற அனுஷ்யாதேவியின் (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர், யாழ் கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம்) கணவரும், றுஷாங்கன் ( ஊடகவியலாளர், பணிப்பாளர், KISS Creations & சிகரம் பப்ளிகேஷன்ஸ் ), சுதேஷ்ணா ( முன்னாள் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர், FLICT-GTZ) ஆகியோரின் தந்தையும், சுதாஜினி (சுயாதீன ஊடகவியலாளர்), கண்ணன் (Software Engineer, DSTA-Singapore) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற சரோஜினிதேவி, யோகேஸ்வரன் (யோகர் - கனடா), செல்வராசா (செல்வி - ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்), மகேஸ்வரி (ராதா), கமலாஜினிதேவி (கமலா) ஆகியோரின் சகோதரரும், சு.வேலுப்பிள்ளை (ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர்), ராஜினி(கனடா), காலஞ்சென்ற யோகேஸ்வரி (பிரதம லிகிதர், சமநல சேவைகள் நிலையம், கைதடி), சு.நாகேந்திரம் (பிரதம லிகிதர், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்), கு.சுப்பிரமணியம் (முகாமையாளர், ஆர்.வீ.ஜீ. கம்பனி, நல்லூர்) ஆகியோரின் மைத்துனரும், ஆரபி, தீரணா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை (12-09-09) காலை 9 மணி முதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (13-09-09) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்ற பின்னர், காலை 10 மணிக்கு தெஹிவளை கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: றுஷாங்கன்(மகன்)

இல.31-2/4, வண்டவர்ட் பிளேஸ், தெஹிவளை, தொ.பே.: 0112 721809

### சுந்தரம் செல்வரத்தினம்



திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் செல்வரத்தினம் நேற்று (11.09.2009) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - தில்லையம்மா தம்பதியினரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற பராசக்தியின் அன்புக் கணவரும், இராசரத்தினத்தின் சகோதரரும், ஜெயமோகன், கலாரஞ்சனி (லண்டன்), காலஞ்சென்றவர்களான சிவமோகன், ரவிமோகன் ஆகியோரது அன்புத் தந்தையும், காசிநாதன் (லண்டன்), கேதாரகௌரி ஆகியோரது அன்பு மாமனாரும், கஜந்தன் (லண்டன்), காசிகா (லண்டன்), அபிசா (லண்டன்), கிசோபன், தானுசா ஆகியோரது பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.09.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சைவப்பாடசாலை லேன்,
திருநெல்வேலி வடக்கு.

தகவல்:
செ.ஜெயமோகன் (மகன்)

திறப்பு விழா அழைப்பு

நாளை (13.09.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு

சாவகச்சேரி கென்ஸ்மன் வீதியில் (நீதிமன்றம் முன்பாக)

TARA INFO TECH

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ K.N. டக்ளஸ் தேவானந்தா அவர்களால் திறந்து வைக்கப்பட இருக்கின்றது. அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

06.09.2009 இல் உதயன் பத்திரிகையில் பிரசுரமாகிய TARA INFO TECH இன் VacancyNotice க்கு அமைய நேர்முகத் தேர்வு இன்று (12.09.2009) சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு கென்ஸ்மன் வீதிக் கிளையில் (நீதிமன்றம் முன்பாக) நடைபெறும். கலந்துகொள்ளத் தகுதியானோர் சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இரட்டைக் கோபுரத் தகர்ப்பின் எட்டாம் ஆண்டு நிறைவில்.........!

சர்வதேசப் பொலிஸ்காரனான அமெரிக்காவையே கலங்கடித்துப் பீதிக்குள் ஆழ்த்திய நியூயோர்க் உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரம் மற்றும் அமெரிக்கப் பாதுகாப்புக்கான மையத்தளமான 'பென்டகன்' ஆகியவற்றின் கட்டடங்களை விமானங்கள் மூலம் மோதித் தாக்கும் சாகசம் நடத்தப்பட்டு நேற்றுடன் எட்டு ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டன.

இந்தத் துணிகரத் தாக்குதல்களை ஒப்பேற்றி முடித்தவர்கள் என்று கூறப்படும் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் இலக்கு எட்டப்பட்டதா, நோக்கம் நிறைவேறியதா என்பது தெரியவில்லை; தெளிவில்லை.

ஆனால் அந்தத் தாக்குதலினால் அதிர்ந்துபோன அமெரிக்க ஏகாதிபத்தியம் அதையடுத்து, அத்தாக்குதலுக்குப் பழிவாங்கப் போவதாகக் கூறிக்கொண்டு - நேச நாடுகளையும் உதவிக்கு அழைத்துக்கொண்டு - பெரும் எடுப்பில் ஆரம்பித்த 'பயங்கரவாதத்துக்கு எதிரான உலகப் போர்' மட்டும் இன்னும் தனது நோக்கத்தை நோக்கி முன்னேறவேயில்லை. சுருக்கமாகச் சொல்வதானால் அந்த எத்தனம் 'பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காக முடிந்த கதையாக' திசைமாறிச் சிதம்பிப்போய்க் கிடக்கின்றது.

அமெரிக்கா மீதான 'செப்டெம்பர் 11' தாக்குதலுக்கான சூத்திரதாரிகள் அதற்குத் திட்டமிட்ட மையம் ஆப்கான் என்ற கருதுகோளில் அந்த நாட்டையே அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு முதலில் இலக்கு வைத்தது. அதனோடாவது அமெரிக்கா நிறுத்தியிருக்கலாம்; அடங்கியிருக்கலாம்.

அதை விடுத்து, அளவுக்கு மீறிய செருக்கோடு உலகெங்கும் 'வாய்' வைத்தது அமெரிக்கா. 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற கண்மூடித் தனமான - குருட்டாம் போக்கிலான - அப்போதைய புஷ் நிர்வாகத்தின் எதேச்சாதிகாரம் உலக அமைதிக்கே பங்கம் விளைவித்து வேட்டு வைத்தது. அமெரிக்காவுக்கும் தலைகுனிவை ஏற்படுத்தி நிற்கின்றது.

எது பயங்கரவாதம், யார் பயங்கரவாதிகள் என்பதற்கான சரியான - நுண்ணிய - அளவு கோல்களைப் பயன்படுத்தி உண்மையான, நேர்மையான, தெளிவான, தீர்க்கமான முடிவுகளை எடுக்காமல், ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் தரப்புகளை எல்லாம் சட்ட ரீதியான - நேர்மையான - இறைமையுள்ள - அரசுகளாகத் தன்பாட்டில் அங்கீகரித்தபடி நீதி, நியாயம், உரிமை வேண்டி தார்மீகப் பண்புகளோடு போராடும் ஏனைய தரப்புகள் எல்லாவற்றுக்கும் 'பயங்கரவாதம்' என்ற முலாமைப் பூசிக்கொண்டு, அமெரிக்காவும் அவற்றின் நேச அணிகளும் செயற்பட்டன; செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அமெரிக்காவின் இத்தகைய நேர்மைத்தன்மையில்லாத பார்வையின்கீழ் அணி திரண்ட சக்திகள், தர்மத்தின் வழி தழுவி, நியாயத்தின் பாதையில் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை எல்லாம் பயங்கரவாதமாகத் திரிபுபடுத்தி முத்திரை குத்தின. நீதிக்காகப் போராடும் சக்திகளுக்கு பயங்கரவாதச் சேறு பூசிக்கொண்டு, அதேசமயம், அவற்றை நசுக்க முயலும் அடக்குமுறை அரசுகளின் இராணுவப் பயங்கரவாதத்தை மூடி மறைக்கவும் அமெரிக்கா தலைமையிலான இந்த சர்வதேச எதிர்ப்பியக்கம் நன்கு உதவியது. இதன் விளைவை உலகம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

சரியோ, பிழையோ, இராணுவ ரீதியிலான அடக்குமுறை ஆட்சியோ, இல்லையோ ஈராக்கில் அதிபர் சதாம் ஹுசைன் தலைமையில் அமைதியான ஓர் ஆட்சி முறைமை தொடர்ந்து நீடித்தது. அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் ஆக்கிரமிப்பு எதேச்சாதிகாரம் அந்த நாட்டை இன்று குண்டு வெடிப்புகளிலிருந்து மீள முடியாத நிரந்தர இரத்த பூமியாக்கியிருக்கின்றது. அமெரிக்க ஆக்கிரமிப்பின் விளைவால் இன்று ஈராக்கில் தினசரி குண்டு வெடிப்புகள், தற்கொலைத் தாக்குதல்கள், அழிவுகள், பிணக் குவியல்கள், கோரங்கள், கொடூரங்கள். அமைதியாக விடியும் நாள் என ஒன்று இல்லை என்ற நிலைமையே அங்கு ஏற்பட்டிருக்கின்றது.

மனித குலத்திற்குப் பேரழிவைத் தரும் ஆயுதங்களை சதாம் நிர்வாகம் தயாரித்து வைத்திருக்கின்றது என்ற பொய்யைப் பிரகடனப்படுத்திக்கொண்டு அந்தத் தேசத்தை ஆக்கிரமிக்கும் 'பயங்கரவாதத்தை' புரிந்தது அமெரிக்கா.

ஈராக்கை ஆக்கிரமிக்க புஷ் நிர்வாகம் முன்வைத்த காரணம் பச்சைப் பொய் என்பது அம்பலமான நிலையில் -

தான் ஆக்கிரமித்த ஈராக், ஆப்கான் போன்ற தேசங்களில் அதற்கு முன்பிருந்தமையை விட மிக மோசமான, மிகக் கோரமான, மிகக் கொடூரமான, மிகக் கேவலமான நிலைமையை ஏற்படுத்திவிட்டு -

முன்வைத்த ஆக்கிரமிப்புக் காலை பின்வாங்கவும் முடியாமல், வைத்துப் பேணவும் முடியாமல் அல்லாடுகின்றது அமெரிக்கா.

'உலகப் பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற பெயரில் அமெரிக்கா ஆரம்பித்த மாயை யுத்தம், அமெரிக்காவையே பயங்கரவாதத் தரப்பாக மாற்றி நிற்பதே உண்மை.

'பயங்கரவாதத்துக்கு எதிரான் சர்வதேசப் போர்' என்ற பெயரில் முன்னைய புஷ் நிர்வாகம் இழைத்த பாரிய தவறுகளின் தாற்பரியத்தைப் புரிந்துகொண்டு, அவற்றுக்குப் பிராயச்சித்தம் செய்து, நியாயம் புரியும் நல்ல நோக்கம் அமெரிக்காவின் புதிய ஒபாமா நிர்வாகத்துக்கும் இருப்பதாகத் தெரியவில்லை என்பது தான் நிஜம்.

# தற்காலிக இணைப்பு பெற்ற ஆசிரியர் பிரச்சினைகள் தீரும் வரை தற்போதைய பாடசாலைகளிலேயே கையெழுத்திட அனுமதிக்க வேண்டும்

## வவுனியாவுக்கு இடமாற்றம் பெற்றுள்ள ஆசிரியர்கள் ஆளுநரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.12

யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாக இணைப்புப் பெற்றுள்ள ஆசிரியர் கள் பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரை தொடர்ந்தும் தற்போதைய பாடசாலைகளிலேயே கையெழுத்திடுவதற்கு வசதிசெய்து தரும்படி தற்காலிக இணைப்புப் பெற்றுள்ள ஆசிரியர்கள் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்காலிக இணைப்புப் பெற்றுள்ள ஆசிரியர்களின் சங்கம் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஊடாக ஆளுநருக்கு அனுப்பியுள்ள மகஜரில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

ஏ-9 பாதை மூடப்பட்டதை அடுத்து யாழ். குடாநாட்டின் கல்வி வலயத்தின் பல்வேறு பாடசாலைகளிலும் எங்களுக்கு தற்காலிக இணைப்பு வழங்கப்பட்டிருந்தது. எங்களில் 800 பேர் வரை உள்ள போதிலும் விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கில ஆசிரியர்கள் என்று நூறுபேர் வரை தெரிவு செய்யப்பட்டு செப்ரெம்பர் 7ஆம் திகதி முதல் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் இணைப்பு ஆசிரியர்களாக பணிபுரியும் வகையில் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் இந்தப் பிரிவைச் சேர்ந்த இளவயதினர் உட்பட பலர் யாழ்ப்பாண வலயத்தில் இருந்து இன்னமும் இடமாற்றம் செய்யப்படவில்லை.

ஆனால் வவுனியாவிலுள்ள நலன்புரி நிலையப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் சிறு குழந்தைகளையுடைய பெற்றோர்கள், சிலர் அண்மையில் குழந்தை பெற்றவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், திருமணமானவர்கள். இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டவர்கள் அடிப்படை சம்பளமாக 16 ஆயிரம் ரூபா வரையிலும் பெற்று வருகின்றார்கள். சம்பள உயர்வு, பதவி உயர்வுகடன் வசதிஎதுவுமின்றி ஏனைய இடம் பெயர்ந்த ஆசிரியர்களைப் போலவே மிகத் துன்பமான நிலையில் வாழ்கிறவர்கள்.

வவுனியாவைப் பொறுத்தவரை மக்கள் செறிவுகூடிய இடம் என்பதுடன், வாழ்க்கைச் செலவும் அதிகரித்த இடமாகும். இங்கு தனிப்பட்டவர்களுக்கு உணவு, உடை மற்றும் தங்குமிட வசதிகளுக்கு என 10 ஆயிரம் ரூபாவுக்கு மேல் செலவாகும். மேலும் இந்த ஆசிரியர்கள் தினமும் தமது வேலைத் தலங்களுக்கு தமது சொந்த செலவில் 60 கிலோ மீற்றர் தூரம் வரை பயணம் செய்ய வேண்டிய நிலை உள்ளது.

இதேவேளை போக்குவரத்து கஷ்டங்களில் குடும்பங்களுடனான தொடர்புகள் உடனடியாகத் துண்டிக்கப் பட்டுவிடும். யாழ்ப்பாண குடாநாட்டிலேயே நிரந்தரமாக தங்கியுள்ள குடும்பங்களுக்கு முழுமையாக சம்பளப் பணத்தை அனுப்பி உதவுவதற்கும் முடியாத நிலை ஏற்படும். இந்த நிலைமையில் எதிர்பார்க்கப்படுவது போல் திருப்தியாகவோ, அர்ப்பணிப் போடுமோ கல்விப்பணிகளை எம்மால் முன்னெடுப்பதென்பது கடினமாகும்.

இருந்த போதும் ஏ-9 மூடப்படுவதற்கு முன்னர் பணிபுரிந்த இடங்களில் பணிபுரியவும் ஆயத்தமாக இருக்கின்றோம்.

பல ஆசிரியர்கள் தமது பட்டப்படிப்பு பரீட்சைகளுக்கும், தொழில்சார் பரீட்சைகளுக்கும் ஆயத்தமாகி வருகிறார்கள். அடுத்து வரும் மாதங்களில் பரீட்சைகள் நடைபெறவிருக்கின்றன.

எனவே மேற்படி கோரிக்கையை ஆலோசனைக்கு எடுத்து, எமது இடமாற்ற உத்தரவை மறுபரிசீலனை செய்வதுடன், தொடர்ந்தும் தற்போதைய பாடசாலைகளிலேயே கையொப்பம் இடுவதற்கு ஆவன செய்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம் -என்றுள்ளது. (ப)

# தென்மராட்சிக் 'கல்வி வலயத்துக்கு விரைவில் புதிய கட்டடம்

யாழ்ப்பாணம், செப் 12

தென்மராட்சி கல்வி வலயத்திற்கு புதிய கட்டடம் அமைப்பதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

கடந்த 10ஆம் திகதி தென்மராட்சிக்குச் சென்ற மாகாணக் கல்வி அமைச்சின் பாடசாலைகள் வேலைகள் பகுதிப் பணிப்பாளர், தேசிய பாடசாலைகள் பணிப்பாளர், மாகாண பாடசாலை வேலைகள் பகுதிப் பொறியியலாளர், யாழ்.மாவட்ட பாடசாலைகள் வேலைகள் பகுதி பொறியியலாளர் ஆகியோர் வலயக் கல்வி அலுவலகம் அமைக்கவுள்ள காணியைப்பார் வையிட்டு மதிப்பீடுகளை மேற்கொண்டனர்.

வலயக் கல்வி அலுவலகத்திற்கென சாவகச்சேரி ஹென்ஸ்மன் வீதியில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் காணி கொள்வனவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (50-207)

# யாழ்ப்பாணத்தில் 'ரின்' மீன் தொழிற்சாலை அமைக்க உதவுமாறு ஜெய்க்கா நிறுவனத்திடம் கோரிக்கை

நல்லூர், செப்.12

'ரின்' மீன் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கும் மீனவர்களின் அத்தியாவசிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும், விவசாயம், கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவுத் துறைக்கான தேவைகளை நிறை வேற்றவும் உதவுமாறு யப்பானின் ஜெய்க்கா நிறுவனத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் யாழ்.செயலகத்தில் மேற்படி நிறுவனத்துடனான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. இதில் ஜெய்க்கா நிறுவனத்தின் பொது விநியோக பணிப்பாளர் மசாமி கியூலிஸ் மற்றும் அவரது குழுவினர்களுடன் விவசாயிகள், கூட்டுறவு, மீன் பிடி சங்கங்களின் பிரதி நிதிகள், திணைக்களத் தலைவர்கள் யாழ் மாவட்ட அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடினார்கள்.

விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்தும், பழமர உற்பத்திகள், அவற்றைப் பாதுகாத்தல் உட்பட பல்வேறு உற்பத்திகள்தொடர்பாகவும், கால்நடைகள் அபிவிருத்தி குறித்தும், பல. நோ.கூ சங்கங்களின் தேவைகள் குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டன. ஜெய்க்கா அமைப்பு இவற்றிற்கென வழங்க வேண்டிய உதவிகள் குறித்தும் ஒவ்வொரு தரப்பில் இருந்தும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டன.

இது தொடர்பாக திணைக்களத் தலைவர்கள் உரிய அறிக்கையை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் அவை யப்பானிய அதிகாரிகள் குழுவிடம் கையளிக்கப் பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப் படும் எனவும் அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார். (50- 111)

## வடமாகாண விளையாட்டு விழா தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 12

வடமாகாண விளையாட்டு விழா தொடர்பான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று சனிக்கிழமை இரண்டு மணிக்கு நடைபெறும் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கதின் பிரதிநிதிகளையும், நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ள கலந்துரையாடலில் அனைத்து விளையாட்டுச் சங்கங்களின் தலைவர் அல்லது செயலாளரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம் அறிவித்துள்ளார். (50)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 28 | 13.09.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | நவமி |
| | பி.ப. 02.17 வரை |
| நட்சத்திரம்: | திருவாதிரை |
| | மு.இ. 11.57 வரை |
| சுபநேரம்: | 09.03 - 10.33 |
| ராகுகாலம்: | 04.33 - 06.03 |

# முகாம்களில் இருந்து பல்கலை. மாணவர் யாழ்ப்பாணம் வருவதற்கு அனுமதி

## நன்றி தெரிவித்து ஜனாதிபதிக்கு ஒன்றியம் கடிதம்

யாழ்ப்பாணம், செப்.12

முகாம்களில் உள்ள எமது மாணவர்கள் கல்வியைத் தொடர்வது தொடர்பாக எடுத்துள்ள நடவடிக்கை குறித்து நன்றி தெரிவித்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடிதம் ஒன்றை நேற்று ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளது. இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படுள்ளவை வருமாறு:

உள்ளகமாக இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் உள்ள எமது மாணவர்கள் கல்வியை தொடர்வதற்கும், மேற்கொள்ளுவதற்குமான நடவடிக்கைகளை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் நிர்வாகம் எடுத்து வருகின்றது. முகாம்களில் உள்ள மாணவர்களால் அனுப்பி வைக்கப்படுகின்ற கடிதங்களும் கிடைக்கப் பெற்றுள்ளன என்பதை, எமக்கு கடிதங்களை அனுப்பிவைத்த மாணவர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றோம். தங்களது கல்வி தொடர்பாக மிகுந்த கரிசனையுடன் பல்கலைக்கழக நிர்வாகம் செயற்பட்டு வருகின்றது என்பதையும் அறியத் தருகின்றோம்.

பாதுகாப்புத் தரப்பினரின் வேண்டுதலுக்கு ஏற்ப குறித்த முகாம்களில் உள்ள மாணவர்களது விவரங்கள் உறுதி செய்யப்பட்டு நிர்வாகத்தால் அனுப்பப்படுகின்றன. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.

நேற்றைய தினம் ஒரு தொகுதி மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். இதற்காக எமது மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அதுடன் மருத் துவபீட மாணவர்களும் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்கள். ஒவ்வொரு மாணவனது வருகையும் எமக்கு மகிழ்ச்சி அளிக்கும் விடயமாகவே உள்ளது. எமது ஏனைய மாணவர்களும் விரைவில் அனுப்பி வைக்கப் படுவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இது பற்றிய கடிதம் ஒன்றை நேற்று ஜனாதிபதிக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அனுப்பிவைத்துள்ளது- என்றுள்ளது. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் மாதாந்தக் கருத்தரங்கு - பதினெட்டாவது நிகழ்வு

பேரன்புடையீர்,

மேற்படி அமைப்பின் மாதாந்தக் கருத்தரங்க தொடர் நிகழ்வின் பதினெட்டாவது அமர்வானது எதிர்வரும் ஆவணித்திங்கள் 28ஆம் நாள் (13.09.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு ஆனைப்பந்தியில் அமைந்துள்ள தலைமைச் செயலக மண்டபத்தில் பிரம்மஸ்ரீ . ச. ஸ்ரீகாந்த குருக்கள் அவர்கள் தலைமையில் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

**நிகழ்ச்சி நிரல்**

உருவப்பட திரைநீக்கம் - அச்சுவேலி, பிரம்மஸ்ரீ குமாரசுவாமி குருக்கள் அவர்களின் உருவப்படத்தை அமரர் அவர்களின் பேரன் பிரம்மஸ்ரீ . க.வைத்தீஸ்வரக் குருக்கள் திறந்து வைத்து மலர்மாலை அணிவித்து கௌரவிப்பார்கள்.

வாழ்த்துரை - பிரம்மஸ்ரீ . க . வைத்தீஸ்வரக் குருக்கள் (கொழும்பு)

கருத்துரை - விடயம் - விஷேட திரவிய ஹோமம்

வழங்குபவர் - சாதக இளவரசு - பிரம்மஸ்ரீ.நா.பிரசாந்தசர்மா (வட்டுக்கோட்டை)

*மேற்படி நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்,
ஆனைப்பந்தி.

(88806)

## வீடு வளவு விற்பனைக்கு

...வாளர் வீதியில் உள்ள சுற்று ... பரப்புக் காணியும் அதில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய பெரிய புதிய கல்வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- க.சேதுபதி
மஞ்ச உணாவைரவர் கோயிலடி,
புத்தூர் - 060 221 6945
திருமதி எஸ்.சந்திரமதி (மஞ்சு)
சூளானை சுன்னாகம்.

(ஜ/560900)

## தவறிவிட்டது

திருநெல்வேலி சந்தையில் 16.08.2009 திருமதி தர்மகுலசிங்கம் ஆகிய எனது மோட்டார் சைக்கிள் திறப்பு, மோட்டார் சைக்கிள் லைசன்ஸ், வேலை அடையாள அட்டை, கைத்தொலைபேசி ஆகியன காணாமற்போயின. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் 0777662039 என்ற இலக்கத்துக்கு தகவல் தரவும். சன்மானம் வழங்கப்படும்.

# முல்லைத்தீவில் கோவைகள் மீட்பு

யாழ்ப்பாணம், செப்.12

வவுனியா கல்வித் திணைக்களத்தினரால் முல்லைத்தீவு கல்வி வலய பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரின் தனிநபர் கோவைகள் ஒரு தொகுதி மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட தனிநபர் கோவைகள் பற்றிய பெயர் விவரங்கள் அந்தந்த வலயக்கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு வலய அறிவித்தல் பலகையில் ஒட்டப்பட்டுள்ளன.

### கைதடி நலன்புரி நிலையம் நேற்று மூடப்பட்டது

கைதடிசித்தஆயுள்வேத நிலையத்தில் இயங்கிய நலன்புரி நிலையம் நேற்று மூடப்பட்டது.

இங்கு தங்கியிருந்த குடும்பங்கள் கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

பருவ மழை ஆரம்பிக்க முன்னர் வேறு இடத்திற்கு மாற்றுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்து தென்மராட்சி பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் நேற்று வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

### கூடைப்பந்தாட்ட அணி தேர்வு இன்று

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணித்தெரிவு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற இருப்பதால் கூடைப்பந்தாட்டக் கழகங்கள் தமது வீர/வீராங்கனைகளை அனுப்பிவைக்குமாறு கூடைப்பந்தாட்ட சங்கம் கேட்டுள்ளது. (1)

### தென்மராட்சியில் ஆங்கில பாட பயிற்சி

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 3 வகுப்புகளில் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி வகுப்பு நடத்தப்படவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் பயிற்சி வகுப்பு நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-297)

## கண்ணீர் அஞ்சலி



புதிய உயர் கல்லூரி நிர்வாக இயக்குநர்
திரு.சண்முகநாதன்
விரிவுரையாளர் அருள்நங்கை அம்மா
ஆகியோரின் ஏக புத்திரன்

**செல்வன் சந்துதன்**

அவர்களின் திடீர்மறைவினால் அதிர்ச்சியிலும் ஆறாத்துயரிலும் இருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு, எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புதிய உயர்கல்லூரி
(B.Sc. மாணவர்கள், மதுரை, காமராஜர் பல்கலைக்கழகம்).

## மரண அறிவித்தல்கள்

### மோசஸ் செல்லத்துரை (முறிவு நெரிவு சித்த வைத்தியர்)



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மோசஸ் செல்லத்துரை 08.09.2009 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மோசஸ் - மரியாச்சி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஜேக்கப் - மேரிறோசம்மாவின் பாசமிகு மருமகனும், றெஜினாவின் அன்புக் கணவரும், றமேஸ், கங்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும், வெலிச்சோர், அருமைநாயகம், எலிசபெத், காலஞ்சென்ற சொர்ணம்மா மற்றும் இருதயமலர், பாக்கியநாதர், பீற்றர், இராசநாயகம், அருள்நேசன் ஆகியோரின் பாசமிகு மூத்த சகோதரனும், காலஞ்சென்றவர்களான அந்தோனிமுத்து, திரவியநாதன், சவுந்தரநாயகம், அற்புதம், திரேசம்மா மற்றும் மதுரநாயகம் ஆகியோரின் மைத்துனரும், ஞானராஜன், தீபா ஆகியோரின் அன்பு மாமனாரும், டினுசன், நிருசா, மரியா, ஜெரேமியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (12.09.2009) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு புனித செபமாலை மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித செபமாலை மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விளாவெளி றோட்,*
*பெரியவிளான், இளவாலை.* (88807)

தகவல்:
மகன் றமேஸ்.

### அப்புத்துரை நேசமலர்



நீர்வேலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை நேசமலர் 08.09.2009 செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரையின் பாசமிகு மனைவியும் சோதிலிங்கம் (ஜேர்மனி), பாஸ்கரன் (தொழில்துறை திணைக்களம், யாழ்ப்பாணம்), அமரர் சுசீலா ஆகியோரின் அன்புத் தாயாரும் இந்துமதி (ஜேர்மனி), நிர்மலதா (கோப்பாய்), குணரட்ணம் (கனடா) ஆகியோரின் மாமியாரும் ஞானாம்பிகை (கனடா), புஸ்பராணி, கதிர்காமநாதன் (கனடா), புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் இராஜேந்திரம், அமரர் செல்லக்கண்டு ஆகியோரின் அன்பு மைத்துனியும் டிலக்சன், அபிரா, வைஸ்ணவி, ஆதித்தியன், வித்தகி, நிவேஜன், நிரோஜன், நிஷாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.09.2009) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப. 10 மணியளவில் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுசி வாசா,
நீர்வேலி மத்தி, நீர்வேலி.

தகவல்: மகன்மார்:
அ.சோதிலிங்கம் (ஜேர்மனி),
அ.பாஸ்கரன் (சிவா - கோப்பாய்). (88814)

### திருஞானம் இராசசிங்கம்

(முன்னாள் பரிசோதகர், இ.போ.ச.)



வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரத்தை வாழ்விடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருஞானம் இராசசிங்கம் 08.09.2009 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி திருஞானம் (O.A., கச்சேரி) - ஆனந்தபசுவதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா (கா.சீ.கூட்டுத்தாபனம்) - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் இராசலட்சுமியின் (இராசமணி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற கணேசலிங்கம் (J.P - வல்வெட்டி) மற்றும் தியாகலிங்கம் (முன்னாள் இ.போ.ச. முகாரி) ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற இராசலட்சுமியின் பெறாமகனும் சூரியகுமார் (இந்தியா), நித்தியானந்தன் (U.K), பாலேஸ் (இந்தியா), சறோயினி (கனடா), சந்திரா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் வாசுகி (U.K), கஜன் (கனடா), மயூரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயரட்ணம் சிறிகாந்தனின் (U.K) அன்பு மாமனாரும் அனிகா, அமிஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற இராசலிங்கம் (முன்னாள் ஈழநாடு நிர்வாக முகாமையாளர்), இராசசிங்கம் (கொழும்பு), திருமதி இராசேஸ்வரி கந்தசாமி (கொழும்பு), காலஞ்சென்ற இராசநாயகம் (கா.சீ. கூட்டுத்தாபனம்), திருமதி இராசபுஸ்பம் அருளானந்தன் (இலங்கை சீ. கூட்டுத்தாபனம்), திருமதி செல்வம் ஆனந்த நடராஜா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.09.2009) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனடா T.P.: 0015146851019
*ஆனைக்கோட்டை வீதி,*
*குளப்பிட்டி, கொக்குவில்.* (88812)

தகவல்:
திருமதி இ.அருளானந்தன்
(மைத்துனி).

## திருமணநாள் வெள்ளிவிழா வாழ்த்து



நயினை S.R.K உருத்திரகுமாரன்
சுபோதினி தம்பதிகள்
நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
நல்லருள் துணை கொண்டு திருமண
நாள் இணைவின் 25ஆவது ஆண்டின்
நிறைவினை இன்று (12.09.2009)
கொண்டாடி மகிழ்கின்றனர்.
இப் பொன்னான நன்நாளில் எங்கள்
அன்புக்கினிய பெற்றோரை வாழ்த்தி
வணங்கி மகிழ்வடைகின்றோம்.

"ஜோதி வாசா" ஆடியபாதம் வீதி
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

மகன் உ.கௌரிசங்கர் (டென்மார்க்) மகள் உ. அபிராமி

## வெற்றி நமதே திரைப்பட ஆரம்பவிழா... அச்சுவேலியில்



உலகத் தொலைக்காட்சிகளில் முதல்முறையாக மிகப் பிரமாண்டமான பொருள் செலவுடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்
(கனடா, லண்டன், பிரான்ஸ்)
படமாக்கப்படும் தமிழ், சிங்கள கலாசாரத்தின் ஐந்து தசாப்த காலப் பின்னணியை மையமாகக் கொண்ட தமிழ் சிங்கள
தென்னிந்திய கலைஞர் நடிக்கும்
வீடியோ கலாமினியின்

**வெற்றி நமதே!**
**ජය අපේ** ஜய அப்பே!

(தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளில்)
கதைவசனம், பாடல்கள், இயக்கம்
அச்சுவேலியூர் மாணிக்கம் சிவமூர்த்தி (வீடியோ கலாமினி)
ஆரம்பித்து வைப்பவர் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்

கௌரவ டக்ளஸ் **தேவானந்தா**

காலம்:- 12.09.2009 சனி, காலை 9 மணி
இடம்:- இராசமாணிக்கம் கல்யாண மண்டபம் - அச்சுவேலி
தயாரிப்பு:- பி.விஜய அபய சேகர

## S&M Consultant Service, Branch Office

**148, Temple Road, Jaffna.** (யுனிசெவ் முன்பாக)

**யாழ். மாணவர்களுக்கு லண்டனில் விசாபெற்றுக் கொடுப்பதில் முன்னணிவகிக்கும் ஒரே நிறுவனம் !!!**

விண்ணப்பித்த அனைவருக்கும் விசா கிடைக்கப் பெற்றுள்ளதை மீண்டும் ஞாபகமூட்ட விரும்புகின்றோம்.

இவ்வருடத்திற்கான இறுதிப்பிரவேசம் எதிர்வரும் நவம்பர் மாத முற்பகுதியுடன் முடிவடைவதால், தற்பொழுது நடைமுறையில் உள்ள சலுகைகளைப் பயன்படுத்தி மாணவர்கள் தமக்குரிய விசாக்களைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆலோசனை வழங்குகின்றோம்.

உடனடியாக உங்கள் சுயவிவரக் கோவையையும், கல்விச் சான்றிதழ்களையும் , பாஸ்போட் பிரதி அன்றேல் பிறப்புச் சான்றிதழின் ஆங்கில மொழிபெயர்ப்பு ஆகியவற்றையும் சமர்ப்பித்து தங்களது விண்ணப்பங்களை உறுதி செய்து கொள்ளவும்.


உடன் தொடர்பு - 0774528818
0212223818
E.mail : mg1404_2009 @yahoo.com

148, கோவில் வீதி,
(யுனிசெவ் முன்பாக)
யாழ்ப்பாணம்.

(சி/560882)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலைப் பற்றி!



காதல் என்பது வாழும் போது வாழவைக்கும் எல்லை கடந்த அன்பை அள்ளிச் சொரியும் இருவருக்கிடையே பரிமாறப்படும் இனிய உறவு. இறைவன் கொடுத்த அற்புத வரம். எத்தடைவந்தாலும் தொடர்வது. அன்பு மனங்களுக்கிடையே பூத்துக் குலுங்குவது. பல யுகங்கள் கடந்து வாழ்ந்து கொண்டிருப்பது இக் காதல் எனும் ஒன்றாகும்

காதல் என்பது அளவு கடந்த ஆயுள் கூடியது. எதிர்பார்ப்புகளை சந்திப்பது. எதிலும் துணிந்து செயற்பட வைப்பது. வையத்தில் வாழ்வாங்கு காலம் வாழ்வது. அறிவியலைக் கூட ஆக்கிரமிப்பது. இயற்கை உணர்வினால் ஏற்படுவது. விழிகளில் தொடங்கி இதயத்தில் வளர்வது. மனதினை மாற்றிப் பெறப்படுவது. உணர்வுகள் அதிகரிக்கும் வேளை உருவாகுவது. அனைத்தையும் கடந்த அட்சய விருந்து.

பார்க்கும்போது உண்டாவது. காலம் காலமாகத் தொடர்வது. கற்பின் ஆழத்தின் படிநிலைகளை உணர்த்துவது. இப்படியே பல விளக்கங்களைச் சொல்லிக்கொண்டு போகலாம்.

ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உருவாகிய இக்காதல் எனும் அம்சம் இன்று பரந்து எங்கும் தொழிற்படுகின்றது. காதலுக்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு விளக்கம் சொல்வர். குழந்தைமீது தாய் காட்டும் பாசம் காதல். அப்பு, ஆச்சி மீது கொள்வதும் காதல். ஆசிரியர், மாணவர்கள் மீது கொள்வதும் காதல். முகாமையாளர் ஊழியர்களிடம் கொள்வதும் காதல். அதிகாரிகள் நாட்டினைக் காக்கும் கடமை மீது கொள்வது காதல். நாட்டு மக்கள் தாய் நாட்டின் மீது கொள்ளும் காதல். இப்படி பலதரப்பட்ட காதல்கள் இருந்தாலும் இங்கு ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையே ஏற்படும் காதலைப் பற்றி நோக்குவோம்.

ஆதாம், ஏவாள் வழி தொடங்கப்பட்ட காதல் இன்று வரை தொடர்வதற்கான காரணம் அது எப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தன்மை கொண்டதுதான். காதல் எனும் உணர்வு ஒருவனுக்குள்ளே இல்லாதுவிடின் அவன் வெறும் மரக்கட்டை. ஒவ்வொருவரும் தமது வாழ்வில் ஏதோ ஒரு விதமான காதலைச் சந்தித்திருப்பார்கள்.

வாரா வசந்தம்

காதல் என்ற வார்த்தையை கேட்டாலே சிலர் பல்லிளிப்பர். இது சிரிக்க வேண்டிய விடயமல்ல. சிந்திக்க வேண்டிய விடயம். ஏனெனில் பல இடங்களில் காதல் சாதகமாக முடிந்தாலும் சில காதல் பாதகமாக முடிந்திருக்கின்றன. எத்தனையோ குடும்பங்கள் காதல் மூலம் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டிருக்கின்றது. அதேசமயம் சில நேரங்களில் காதல் பிரிவு எனும் கோட்டில் கொண்டு போய் விட்டு எத்தனையோபேரின் வாழ்வினைப் பந்தாடி இருக்கின்றது.

முதலில் காதல் எனும் விஷயத்தினை ஒவ்வொருவரும் சரியான முறையில் உணர்ந்து கொள்ளல் வேண்டும். அப்படியாக இருந்தால்தான் எந்தக் காதலும் வெற்றியில் வந்து முடிவடையும்.

இன்று கூட சரித்திரங்களும், வரலாறுகளும் காதலில் தோற்றுப் போனவர்களைத்தான் காதலுக்கு இலக்கணமாகச் சொல்கின்றன. அதேசமயம் வென்றவர்கள் வரலாற்றை உதாரணம் காட்டிச் சொல்வதில்லை. காதலுக்கு உதாரணமாகத் திகழ்ந்தவர்களாக லைலா- மஜ்னு, ஷாஜகான்- மும்தாஜ், தேவதாஸ்- பார்வதி, அனார்க்கலி- சலீம், அம்பிகாவதி- அமராவதியைக் குறிப்பிடலாம். இவர்களின் காதல் இறுதிவரை வெற்றியடையவில்லை. எனவே காதலில் தோற்றவர்கள் மனதைத் தேற்றிக் கொள்ளுங்கள். புரிந்துணர்வு எனும் ஒன்று காதலுக்கு உறுதுணையாக அமைகின்றது. இது இல்லாதுவிடின் அவ்வாழ்வில் எவ்வித அர்த்தமும் புரியாது. இந்தக் காதல் பல பேரை கவிஞர்களாக மாற்றியிருக்கின்றது. எந்தப் பெரிய கவிஞனும் காதலைப் பற்றிப் பாடாமல் இல்லை.

சங்ககாலத்திலே காதலுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து வந்தனர் என சங்க இலக்கியங்கள் கூறி நிற்கின்ற நியமான இலக்கியக் காதலை சங்க இலக்கியங்களிலே காணலாம்.

அன்றைய காதலுக்கும் இன்றைய காதலுக்கும் பல வேறுபாடுகள் உண்டு. அன்றைய காதல் அன்பினை அடிப்படையாக வைத்தே உருவாகியது. இன்றைய காதல் எத்தனையோ விடயங்களை அடிப்படையாக வைத்து உருவாகிறது. புனிதமான காதலே எப்போதும் வாழ்கிறது. ஆடவன் ஒருவனுக்கும் பெண் ஒருத்திக்கும் இடையே ஏற்படுவதுதான் காதல். (தொடரும்).

வே.அகிலேஸ்வரன்.

# யாழ்ப்பாணத்தில் சதிருக்குப் பின்னரான பரத நாட்டிய வளர்ச்சி

(சென்றவாரத் தொடர்ச்சி)

அந்த வகையில் 1958 இல் செல்வி கு. திரிபுர சுந்தரியினதும், 1968 இல் செல்வி சி.கீதாஞ்சலி போன்றோரின் அரங்கேற்றங்கள் சிறப்பாகப் பேசப்பட்டன. இவ்வாறான அரங்கேற்றங்கள் பற்றிய விமர்சனங்களையும், நாட்டியம் தொடர்பான கட்டுரைகளையும் சில சஞ்சிகைகள் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் சஞ்சிகைகள் வெளியிட்டு வந்தன. உதாரணமாக ஆடல் இசையருவி, மல்லிகை, ஊற்று, சிரித்திரன், சாளரம், அருளமுதம், தமிழ் மகள் போன்றன நாட்டியக்கலை வளர்ச்சியில் சிறப்பான பணியாற்றி வந்தன.

தொடர்ந்து யாழ்ப்பாணத்துப் பரத நாட்டிய வளர்ச்சிப் போக்கிலே நிறுவனங்கள், குறிப்பாக அரச மற்றும் தனியார் கல்விக் கூடங்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். அந்த வகையில் வட இலங்கைச் சங்கீதசபை [1931], யாழ்ப்பாண இசைநடனக் கல்லூரி [1948], யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடம் [1974], இணுவில் இசை நடன கிராமியக் கல்லூரி [1969], கலாமன்றம் [1958]மற்றும் தனியாரின் நாட்டியப் பள்ளிகள் போன்றவற்றையும் கூறலாம். இன்று யாழ்ப்பாணத்திலே பட்டப்படிப்பை வழங்கும் நிறுவனங்களாக யாழ்.பல்கலைக் கழகமும், வட இலங்கைச் சங்கீத சபையும் விளங்குகின்றன. இவை இரண்டிலும் முறையே நுண்கலைமாணி, கலாவித்தகர் பட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் பட்டப்பின் பயில் நெறியில் முதுமாணிக்கற்கை நெறியினை திருச்சி கலைக்காவிரி நுண்கலை மன்றத்தின் பட்டத்தினை யாழப்பாணம் திருமறைக் கலாமன்றம் கடந்த இரண்டு வருடங்களாக வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் பாடசாலைகள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள், கல்வியியற் கல்லூரிகள் போன்றவற்றில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் துறையாக பரதக்கலை வளர்ச்சி கண்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் கிராமத்திற்குக் கிராமம் கலாசார விழாக்களை நடத்தி பரதக்கலைஞரை உருவாக்குவதும் இதர கலைஞர்களைக் கௌரவிப்பதும் இடம்பெற்றவண்ணமேயுள்ளன.

யாழ்ப்பாணப் பரதநாட்டிய வளர்ச்சியில் ஊடகங்களின் பங்களிப்பினையும் இந்த இடத்தில் குறிப்பிடவேண்டும். அந்த ரீதியில் ஈழ கேசரி நாளிதழ் பலகாலமாக நாட்டியக் கட்டுரைகள் பலவற்றை வெளியிட்டு வந்தது.மேலும் ஈழநாடு, ஈழமுரசு, முரசொலி, வலம்புரி, சஞ்சீவி, சங்குநாதம், வீரகேசரி, உதயன், சுடரொளி, போன்ற பத்திரிகைகளின் பங்களிப்பினையும் சிறப்பாகக் கூறலாம். யாழ்ப்பாணத்தின் பரதக்கலைஞரின் வளர்ச்சியின் வெளிப்பாடாக பல நாட்டியம் சார்ந்த நூல்கள் தோற்றம் பெற்றன.முன்பெல்லாம் இந்தியாவிலிருந்தே அதிக நாட்டிய நூல்களை எடுத்துக் கற்பதும், கற்பிப்பதும் வழக்கம். ஆனால் இன்று அனுபவம் வாய்ந்த மூத்த கலைஞர்களின் ஆய்வுகள் பல வெளிவந்தபடி உள்ளன. யாழ்ப்பாணத்தில் வெளியாகிய பரதநாட்டிய நூல்களை இரண்டு பிரிவில் அடக்கலாம்.

1] பாடசாலை மாணவர்களுக்காக வெளியிடப்பட்டிருக்கும் நூல்கள்:

பரதநாட்டியம் - அகல்யா சுந்தரம்
பரத நாட்டியம் - செல்வி தரங்கனி
பரதநாட்டியம் - திலக நாயகம்போல்.எல்
பரதநாட்டிய செய்முறை விளக்கம் - ஸ்ரீதேவி கண்ணதாசன்.

2] பட்டப்படிப்பினை மேற்கொள்பவர்களுக்கான நூல்கள்:

பரதக்கலை - பேராசிரியர் வி. சிவச்சாமி
ஆடல் அழகியல் - பேராசிரியர் சபா ஜெயராசா
பரத நாட்டியக் கச்சேரி முறைமை - செல்வி. உமாமகேஸ்வரி

இவ்வாறு ஈழத்துக் கலைஞர்களின் பெரு முயற்சியினால், சதிர், தாளியாட்டம், சின்னமேளம் என்று என்ளிநகையாடிய வழக்கம் மாறி பரத நாட்டியம் என்னும் சிறப்பான வடிவத்தைப் பெற்று தமிழரின் கலாசாரத்தை நிலைநிறுத்தும் பொக்கிஷமாகத் திகழ்கிறது. யாழ்ப்பாணத்தில் பரதக்கலை வளர்ச்சியைப் பல பரிமாணங்களில் கூறலாம். எனினும் குறிப்பிடக் கூடிய சில அம்சங்களே இக்கட்டுரையில் அடங்கியுள்ளன. [முற்றும்].



உ.உமாமகேஸ்வரி (B.F.A)
மானிப்பாய்.

# நல்லூர் முருகன் தெய்வீக இசையரங்கு நிகழ்வு

(சென்றவாரத் தொடர்ச்சி)

இவர் இளமைக் காலத்தில் பாடியபோது மிகவும் விரிவாக ஆலாபனை செய்து, துரிதமாக விரைவுடன் சுரங்கள் செய்து பல சங்கதிகளுடன் பாடுவது இன்றும் ரசிகர்களின் மனக்கண்ணில் தெரிவதாகக் கூறினர். இவரது கச்சேரி திருப்புகழ்பாடி நிறைவுற்றிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

தண்டாயுதபாணி உற்சவ நாள் வயலின் சோலோ நிகழ்வாக ஆர்.ராதாகிருஸ்ணன் குழுவினர் நிகழ்த்திய இசையரங்கு சபையினரை வெகுவாகக் கவர்ந்தது. இந்திய வயலின் கலைஞர்கள் லால்குடி சி.ஜே.ஆர்.கிருஸ்ணன் போன்று வாசித்தமை உணரமுடிந்தது. அவர் அன்று கம்பீர நாட்டையில் மல்லாரி மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. பூர்வ கல்யாணி ராகத்தில் 'ஆனந்த நடனமாடுவார்' என்ற கீர்த்தனம் வெகுசிறப்பாகக் காணப்பட்டது. வலர்ஜிராக 'கூவி அழைத்தால் வருவான் குமரன்' என்பதும் மத்திய மாவதி ராகத்தில் 'கற்பகமே கடைக் கண் பாராய்' என்ற கீர்த்தனங்கள் நன்றாக அமைந்து ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றன. இறுதியாகச் சிந்து பைரவி ராக தில்லானாவுடன் நிறைவு செய்தபோது ரசிகர்கள் அசையாது மேலும் வாசிப்பார்கள் என்று இருந்தனர். இவருடன் சேர்ந்து வாசித்த வயலின் கலைஞர் குகபரன் இணையாக வாசித்தமை பாராட்டத்தக்கது.

இரதோற்சவ நாள் பொன்.ஸ்ரீ. வாமதேவன் முருகன் கீர்த்தனைகளை மிகவும் நிதானமாக, மென்மையாகப் பாடினார். எமது நாட்டின் கர்நாடக இசையில் மூத்தகலைஞரும், இந்தியா, சிங்கப்பூர் நாடுகளில் பெரும் புகழ்பெற்றவருமான ஏ.கே.கருணாகரன் தீர்த்தோற்சவதினம் தெய்வீக இசையரங்கில் மகுடம் சூட்டியது போன்று மிக மிகச் சிறப்பாகப் பாடி ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றார் எனலாம். அவருக்கு அணிசெய் இசைக்கலைஞர்களாக வாசித்த வித்துவான் ஏ.ஜெயராமனின் வயலினும், மிருதங்கம் வாசித்த கலைஞர் எஸ்.மகேந்திரனும் மிகவும் சிறப்பாக வாசித்துப் பாராட்டுதல்கள் பெற்றனர்.

சுனாதவினோதினி ராக வர்ணத்துடன் கச்சேரி ஆரம்பமாகியது. சாவேதி ராகத்தில் 'முருகா முழுமதி உந்தன் மருகா' என்ற கீர்த்தனையினைக் கருணாகரன் இனிமையாகப் பாடினார். ஆடானா ராகத்தில் 'எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம்' என்ற பாடலும் பேகடா ராகத்தில் 'கடைக்கண் வைத்து என்னை' என்ற கீர்த்தனமும் ஆபோகி ராகத்தில் 'வரவேணும் வடிவேலனே' என்ற கீர்த்தனமும் சிறப் பாகப் பாடிக் கரகோஷத்தினைப் பெற்றார். சண்முகப்பிரியாராக ஆலாபனை செய்து 'நின் பாதமே




துணை' என்ற கீர்த்தனையினை நிரவல் சுரங்கல் செய்து பாடிப் பலத்த பாராட்டுதல்களைப் பெற்றார். நிறைவாகத் தில்லானா பயன்பாடி கம்சாநந்தி ராகத்தில் திருப்புகழ்பாடி முடிவுற்றமை முழுமையான இசைக் கச்சேரியினை யாழ்.ரசிகர்கள் பெற்றனர் எனலாம்.

பூங்காவனத் திருவிழா அன்று நிகழ்ந்த நடனம் கண்களுக்குக் குளிர்மையாகவும், செவிகளுக்கு இனிமையாகவும் இருந்தமையினால் ரசிகர்கள் கூட்டம் அதிகம் காணப்பட்டது. இத்தகைய இசை நிகழ்வுகளை ஏற்பாடு செய்த இளங்கலைஞர் மன்றத்தினரின் சேவை என்றென்றும் பாராட்டுதலுக்குரியதாகும்.

இ.கு.சர்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தென்மராட்சிக் கல்விவலய அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கான குறைகேள் நடமாடும் சேவை நேற்று முன்தினம் வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது.
அதிபர்களுக்கான கலந்துரையாடலில் மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா உரையாற்றுவதையும் அருகில் உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.பொன்னம்பலம், வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் ஆகியோரும் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களும் அமர்ந்திருக்கின்றனர்.
ஆசிரியர்களுக்கான குறைகேள் நடமாடும் சேவையில் ஆசிரியர் ஒருவர் தனது குறையினை மாகாணக் கல்விப்பணிப்பாளருக்குத் தெரிவிப்பதையும் நடமாடும் சேவையில் பங்குபற்ற வருகை தந்தவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: தென்னவன்)


**மானிப்பாய் கோவில்பற்று ப.நோ.கூ.சங்கம்**
**கிராமிய வங்கி வைப்பு மீதிகளை உறுதிப்படுத்தல்**

எமது சங்கத்தின் 2008ஆம் நிதியாண்டு கணக்காய்வு இடம் பெற்றுக் கொண்டிருப்பதனால் கிராமிய வங்கியில் வைப்பினைப் பேணும் வாடிக்கையாளர்கள் தமது கணக்கு மீதிகளை வைப்பு கையேட்டினைச் சமர்ப்பித்து 26.09.2009இற்கு முன் (மு.ப 9 - பி.ப 3 மணி வரை) மீதியை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன். தவறப்படுமாயின் வங்கி ஏடுகளின் மீதி தங்கள் மீதியெனக் கருதப்படும்.

பொதுமுகாமையாளர் (சி/560880) 12.09.2009


# 13 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட்

# 'சுப்பர் சிக்ஸ்' போட்டிகளுக்கு 6 பாடசாலை அணிகள் தெரிவு

வலி. வடக்கு, செப்.12

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டிகளின் அடிப்படையில் 'சுப்பர் சிக்ஸ்' போட்டிகளுக்கு 6 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தெரிவான பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு :-

யாழ். கல்வி வலயம்

கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி.

வடமராட்சி கல்வி வலயம்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலம், பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி.

வலிகாமம் கல்வி வலையம்

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி. (50-86)

## பாடசாலை மாணவர்களுக்கு உதவிப் பொருள்கள்

நவாலி, செப்.12

நலன்புரி நிலையங்களிலிருந்து வந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீள் குடியேறிய குடும்பங்களிலுள்ள 18 வயதுக்கு மேற்பட்ட பாடசாலை செல்லும் 149 மாணவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

உதவிப் பொருள்களாக கற்றல் உபகரணங்கள், உடுபுடைவைகள், பாதணிகள், விளையாட்டுப் பொருள்கள் ஆகியவற்றை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (201-100)


**தவறிவிட்டது**

மல்வம், உடுவில் என்னும் முகவரியையுடைய அன்ரன் ராசா ரதிமலர் என்பவரின் தேசிய அடையாள அட்டை (625855438V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

**விற்பனைக்கு**

கட்டடம் கட்டுவதற்குரிய தரமான நாலு இஞ்சி (4'') கொங்கிறீற் கற்கள், கொங்கிறீற் தூண்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0602268222, 0774163146


## முடிவிலாத் துயர் சுமக்கும் முதலாம் ஆண்டு நினைவலைகள்

உருவத்தில் 30 . 05 . 1943



உள்ளத்தில் 24 . 08 . 2008

**அமரர் அம்பலவாணர் செல்வராசா (பூதர்)**

*திதி: 12.09.2009 (கிருஸ்ண ஜெயந்தி)*

கண்ணீரில் கரைந்தது ஆண்டு ஒன்று!
கண்முன்னே நீங்கள் இல்லை உறவாட - இன்று
எண்ணியே கலங்குகின்றோம் எந்நாளும் - இங்கு
மண்ணில் உயிர் உள்ளவரை உங்களை மறவோம்.

*ஓம் சாந்தி*

பூதர் வளவு,
அச்செழு, நீர்வேலி
(88713)
*என்றும் உங்கள் நினைவுடன் வாழும்*
குடும்பத்தினர்.


**வேலை ஆள்கள் தேவை**

எமது உணவகத்திற்கு சிற்றுண்டி தயாரிப்பதில் அனுபவமுள்ள ஆண், பெண் வேலையாள்களும், உணவு பரிமாறுவதற்கு ஆண் வேலையாள்களும் தேவை. நேரில் வரவும்.

தொடர்பு: டிலன் உணவகம்,
133, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**வாடகைக்கு**

யாழ்.மானிப்பாய் வீதியில் கடைத் தொகுதிகள் வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: பூபதி பாண்
060 200 1000
060 200 6000
(சி/560878)


## 31ஆம் நாள் நினைவலைகள்

பூவுலகில் 18 . 07 . 1936



விண்ணுலகில் 13 . 08 . 2009

**அமரர் சுப்பையா வைத்திலிங்கம்**

ஆயிரம் உறவிருந்தாலும்
அப்பா என்றழைக்க உறவில்லை
பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் நிறைகுடமாய்
பரிவுடனே எம்மை வளர்த்து
பாரினிலே உயர வைத்தீர்
குடும்பக் கோயிலின் கோபுர தீபமே
எங்கள் வாழ்வின் விடிவெள்ளியே!
சிரித்து மழலை பேசி
சிரிப்புடனே எங்கு சென்றீர் அப்பா!
மண்ணுலக வாழ்வு போது மென்றோ
விண்ணுலகை நோக்கி விரைந்து
சென்று விட்டீர்கள் அப்பா..!

கணேசன் சென்ரர்,
கே.கே.எஸ். வீதி,
இணுவில்.
(88795)
அன்பு மனைவி,
மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### *சீனிவாசகம் சிவனேஸ்வரலிங்கம்*



### (V.C மாமா)

பெரியாவுடை, கொல்லங் கலட்டியைப் பிறப்பிடமாகவும் பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சீனிவாசகம் சிவனேஸ்வரலிங்கம் கடந்த 09.09.2009 புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் சீனிவாசகம் - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், வேதநாயகியம்மா, மனோன்மணி, காலஞ்சென்ற தணிகாசலம் மற்றும் மகேஸ்வரி, சக்திவேல் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசநாயகம், தியாகராசா, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவகணேசலிங்கம், புஸ்பகலா, வெற்றிவேல், சுசிலாதேவி, பிரபாகரன், பிரபா ஆகியோரின் மாமனும் மயூரனின் பெரிய தந்தையும் வைஷ்ணவி, தர்ஷா, நிறோஜா, பிரம்மினி, லக்ஷ்மினி, அபிஷாகினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2009) சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நெருஞ்சியோலை,
பன்னாலை,
தெல்லிப்பழை.
(88794)
தகவல்:
குடும்பத்தினர்.

## இலவச பண்ணிசை வகுப்பு வழமைபோல் நடைபெறும்

யாழ்ப்பாணம்,செப். 12

அகில இலங்கை திருமுறை மன்றம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் சனி, ஞாயிறு திணங்களில் நடத்திவரும் இலவசப் பண்ணிசை வகுப்பு இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் வழமைபோல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவிருந்த நடமாடும் சேவையை முன்னிட்டு இந்த வகுப்புகள் பிற்போடப்பட்டிருந்தன.

இதேவேளை வட இலங்கை சங்கீத சபை, அகில இலங்கை திருமுறைமன்ற பாடவிதானத்துக்கமைய இலவசப் பண்ணிசை வகுப்புகள் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் பிற்பகல் 3மணி தொடக்கம் 4.30 மணிவரை துறைசை ஆதீன திருமுறைத்தோன்றல் கே. எஸ்.ஆர். திருஞானசம்பந்தனால் நடத்தப்பட்டு வருகிறது என மன்ற அமைப்பாளர் சி. கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார். (202)


**1000ற்கு மேற்பட்ட மாணவர்களை BIT பட்டப்படிப்பிற்கு தயார்படுத்திய ஆசிரியர் குழாம் யாழ் மண்ணில்........**

*A prestigious Degree from University of Colombo*

BIT

Bachelor of Information Technology
[BIT]

உடன் தொடர்பு கொள்க: 0772365461, 0772365460

IDM

IDM Jaffna - No.216, Navalar Road, Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் நல்லூர் சங்கிலியன் தோப்பு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளை நல்லூர் சி.சி.த.க. பாடசாலை மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தியது.
இதில் ஆண்களுக்கான கிளித்தட்டுப் போட்டி, பெண்களுக்கான சைக்கிள் ஓட்டம் மற்றும் கயிறு இழுத்தல் போட்டி ஆகியன இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.
(படங்கள்: லக்ஸ்மன்)

## காக்கைதீவு வெட்டுக்காடு கடற்பரப்பில் காணாமல்போகும் இறால் கூடுகள்

நவாலி,செப்.12

காக்கைதீவு வெட்டுக்காடு கடற்பரப்பில் இறால் கூடுகளிலிருந்து இறால்கள் நாளுக்குநாள் களவு போவதுடன் இறால் கூடுகளும் கடலில் வீசப்படுகின்றன என்று பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாகப் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவிக்கையில்:-

தாம் கடலில் இறால் கூடுகளை அமைத்து விட்டு மறுநாள் சென்று அக்கூட்டுக்குள்ளே இருக்கும் பெருமளவு இறால்களைப் பிடித்து விட்டு மீளவும் இக்கூடுகளை அமைத்துவிட்டு வருவோம்.

தற்போது பல நாள்களாக கூட்டுக்குள் இருக்கும் இறால்கள் காணாமல் போகின்றன. இறால் கூடுகளும் கடலில் வீசப்படுகின்றன.

இதன் காரணமாக பல மீனவக் குடும்பங்கள் நாளாந்தம் சீவிப்பதற்குப் பெரிதும் கஷ்ரங்களை எதிர்கொண்டு வருகின்றன. என்ன செய்வதென்று தெரியாத நிலையிலேயே நாம் இருக்கிறோம்-என்று தெரிவித்தனர். (203-100)

## கழிவுப் பொருள்களைப் பொதுஇடங்களில் போடாது உரப்பைகளில் கட்டி வைக்குமாறு கோரிக்கை

சுழிபுரம், செப். 12

கழிவுப் பொருள்களை உரப்பைகளில் கட்டி பொது இடங்களில் வைத்தால் அதனைப் பிரதேசசபை வீதி சுத்திகரிப்பு ஊழியர்கள் எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மக்கள் கழிவுப் பொருள்களைப் பொது இடங்களில் போடுவதனால், சூழல் மாசடைவதுடன் டெங்குக் காய்ச்சல் பரவுவதற்கும் வாய்ப்பு ஏற்படுவதாகச் சுகாதாரப் பகுதியினர் சுட்டிக்காட்டியுள்ளனர். இதனையடுத்தே இந்த நடவடிக்கையினை வலி.மேற்குப் பிரதேசசபை மேற்கொண்டுள்ளது.

மழை பெய்யும் நாள்களில் வீதியோரங்களிலும், பொது இடங்களிலும் கொட்டப்படும் கழிவுகளில் இருந்து தொற்றுகள் பெருகும் வாய்ப்பு அதிகரிக்கும் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே பொதுமக்கள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து கழிவுகளைப் பொது இடங்களில் கொட்டுவதைத் தவிர்க்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (203-204-28)

## சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு நாடகம், வில்லுப்பாட்டுப் போட்டிகள்

வண்ணை,செப்.12

சர்வதேச சமாதான தினத்தை முன்னெடுக்கும் வகையில் சமாதானத்திற்கும் நலலிணக்கத்திற்குமான பணியகம் வில்லுப்பாட்டு மற்றும் நாடகப் போட்டிகளை எதிர்வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் நடத்தவுள்ளது.

15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நவாலி ஸ்தான அ.மி.த.க.பாடசாலையில் நாடகப் போட்டி நடைபெறும்.

இந்நிகழ்வில் அல்லைப்பிட்டி, பிலிப்பு நேரியார் தேவாலயம், ஈச்சமோட்டை சனசமூக நிலையம், சுண்டுக்குளி கிறீன்பீல்ட் கழகம் மற்றும் கைதடி, நவபுரம் சனசமூக நிலையம், கைதடி மத்தி வள்மதி சனசமூ நிலையம் ஆகியவற்றைச் சேர்ந்த சிறுவர்கள் பங்கு கொள்ளவுள்ளனர்.

16 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் வில்லுப்பாட்டுப் போட்டி நடைபெறும்.

நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் மற்றும் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, அல்லாரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, நாவற்குழி மகாவித்தியாலயம் ஆகியவற்றைச் சேர்ந்த சிறுவர்கள் கலந்து கொள்வாரென தெரிவிக்கப்படுகிறது. (203-160)

## இலவசக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப்.12

யாழ்.ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள பி சி ஏச் எஸ் கணனி நிறுவனத்தின் ஏற்பாட்டில் இலவசக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (204)

## பிரிவுபசார விழாவும் வரவேற்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், செப்.12

வரணி, வடக்கு கிராமஅபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் கிராம சேவையாளர்களுக்கான பிரிவுபசார விழாவும், வரவேற்புபசார விழாவும் கடந்த முதலாம் திகதி வரணி, வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் க.தியாகராசா தலைமையில் நடைபெற்றன.

வரணி வடக்கு ஜே/339 கிராம சேவையாளர் பிரிவில் கடமையாற்றி மாற்றம் பெற்றுச் சென்றுள்ள நல்லதம்பி இராசலிங்கம் மேற்படி கிராம சேவையாளர் பிரிவுக்கு புதிதாகக் கடமையேற்ற ஏ.பிரதீபன் ஆகியோருக்கு இந்நிகழ்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச மேலதிக உதவிப் பிரதேச செயலர் செல்வி றஞ்சனா நவரத்தினமும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக் கிராம சேவையாளர் நிர்வாகத் தலைவர் க.குமாரசாமி, தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி எஸ்.யோகராசா ஆகியோரும் கலந்து கொண்டனர். (203-201)

நுவரெலியாவில் உல்லாச விடுதி அமைக்கவென

## ஓய்வூதியரிடமிருந்து அறவிட்ட பணத்தை தேசிய பாதுகாப்பு நிதிக்கு மாற்றலாமா?

ஓய்வூதியரிடம் சம்மதம் கேட்கப்பட்டுள்ளது

நல்லூர்,செப். 12

நுவரெலியா மாவட்டத்தில் ஓய்வூதியர்களுக்கான உல்லாச விடுதியை அமைக்க ஓய்வூதியர்களிடம் இருந்து கழிக்கப்பட்ட 50 ரூபாவைத் தேசிய பாதுகாப்பு நிதிக்கு மாற்றுவது தொடர்பாக ஓய்வூதியர்களின் சம்மதம் குறித்து அவர்களிடம் கேட்கப்பட்டுள்ளது.

இதற்கான கடிதம் சம்பந்தப்பட்ட ஓய்வூதியர்களுக்கு பிரதேச செயலகங்களால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் ஓய்வூதியர்களுக்கான உல்லாச விடுதி அமைப்பதற்கென கடந்த பெப்ரவரி மாதத்திற்கான ஓய்வூதியக் கொடுப்பனவில் இருந்து ஓய்வூதியர்களின் சம்மதமின்றி 50 ரூபா வீதம் கழிக்கப்பட்டிருந்ததும் ஓய்வூதியர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

தற்போது ஓய்வூதிய திணைக்களம் இலக்கம் டி.ஜீ.பி.ராம் எச்.றெஸ்ட்/2009 2009.08.09 திகதியிட்ட கடிதத்தில் மேற்படி கட்டடத்திற்கென 2010 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் ஏற்கனவே ஓய்வூதியர்களிடமிருந்து கழிக்கப்பட்ட தொகையை தேசிய பாதுகாப்பு நிதிக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் இது குறித்து ஓய்வூதியர்களின் சம்மதம் கோரப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

இதற்கான படிவம் ஓய்வூதியர்களுக்கு தற்சமயம் பிரதேச செயலர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட படிவத்தைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்பாக தமக்கு அனுப்பி வைக்குமாறு நல்லூர்ப் பிரதேச செயலர் ஓய்வூதியர்களுக்கு அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட திகதிக்கு முன்பாக பதில் கிடைக்காத பட்சத்தில் ஓய்வூதியர்கள் தமது பணத்தை தேசிய பாதுகாப்பு நிதிக்கு மாற்றச் சம்மதம் தெரிவித்துள்ளதாகக் கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஓய்வூதியர் சங்கங்களின் முடிவை எதிர்பார்ப்பதாக ஓய்வூதியர்கள் சிலர் தெரிவித்தனர். (203- 111)

## சங்கிலி அபகரிப்பு

நவாலி, செப்.12

நவாலியில் பட்டப்பகல் வேளை வீதியால் சென்று கொண்டிருந்த பெண் ஒருவரின் தங்கச் சங்கிலி திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை முற்பகல 11 மணியளவில் நவாலி ஞானவைரவர் வீதியால் சென்று கொண்டிருந்த பெண் ஒருவரின் சங்கிலியே இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-100)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.12


கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (204)



சாவகச்சேரி சங்கத்தானை ஸ்ரீமுருகன் முன்பள்ளி கட்டடத் திறப்புவிழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.
கட்டடத்தின் பெயர்ப் பலகையினை 'போரூட்' நிறுவன யாழ்.மாவட்ட மனிதநேய உதவிப் பிரிவின் அலுவலர் கி.நந்தகுமார் திரை நீக்கம் செய்வதையும்-
கட்டட மண்டபத்தினை யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் நாடாவெட்டித் திறந்து வைப்பதையும்-
முன்பள்ளி வளாகத்தினுள் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளர் [illegible] மரக்கன்றினை நட்டு வைப்பதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: தென்னவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கந்தர் மாணிக்கம்

தோற்றம்
01.01.1930

மறைவு
24.08.2008

திதி: அட்டமி

எம்மைப் பிரிந்து
ஆண்டு ஒன்று சென்றாலும்
உங்கள் நினைவலைகள்
என்றென்றும்
எம்மை விட்டு அகலா.....

உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளை.**

தகவல்: மாரிமுத்து தனபாலசிங்கம் (மருமகன்).
'மாணிக்க வாசா',
கலைவாணி வீதி, சித்தன்கேணி.

(88684)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# படங்கள் தரும் பதிவுகள்



வரணி, இயற்றாலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற ஆரம் பப்பிரிவு மாணவர்களுக்கான கற்றல் செயற்பாட்டு ஆக்கத்திறன் கண்காட்சியை தென்மராட்சி வலய ஆரம்பப் பிரிவு கல்விப்பணிப்பாளர் வே.ஸ்ரீஸ்கந்தராசா ஆரம்பித்து வைத்து அதிபர், ஆசிரியர் சகிதம் மதிப்பீடு செய்வதைக் காணலாம். *(படம்:அச்சுவேலிச் செய்தியாளர்)*



மட்டுவில் தெற்கு வளர்மதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நிலைய முன்றலில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட உதவி அமைப்பாளர் சூ.அலெக்சாண்டர் சாள்ஸ் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதை இங்கு காணலாம்.
(288)




யாழ். மாவட்ட தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்ற 'நிஸ்கோ' பிரிவு இயக்குநர் சபைக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றபோது 'நிஸ்கோ' பிரிவு பொது முகாமையாளர் பி. பஞ்சலிங்கம் உரையாற்றுவதை இங்கு காணலாம்.



நவக்கீரி அமெரிக்கன் மிசன் பாடசாலையில் லயன் ஆ. நடராசாவின் அனுசரணையுடன் பல இலட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கலை அரங்கை மாவட்டம் 306, I பி இன் உப ஆளுநர் லயன் எஸ். ஜெயவத்சலன் நாடா வெட்டித் திறந்து வைத்தார் அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகத்தின் தலைவர் வி.இராமநாதன், வித்தியாலய அதிபர் எஸ். பகவத்சிங் [illegible] களும் படத்தில் காணப்படுகின்றனர். [illegible]



வட்டுக்கோட்டைப் பிரதேச அரசினர் வைத்தியசாலையில்புதிய கட்டடத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி திருமதி கிருபா செல்வராசா மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் வைத்தியசாலை உத்தியோகத்தர், வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் ஆகியோர் நிற்பதைக் காணலாம்.




கோப்பாய் கலைவாணி கல்வி நிறுவனத்தில் இந்த ஆண்டுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட எஸ்.உதயகுமார் உரையாற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்டச் செயலகக் கணக்காளர் கே.குகதாஸ், சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை உப அதிபர் வி.கே.கணபதிப்பிள்ளை, மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் எஸ். சற்குணநாதன், நிறுவன இயக்குநர் எஸ்.சிவரூபன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



கொக்குவில் மேற்கு சி.சி.த.க.பாடசாலைக்கு வர்ணம் தீட்டுவதற்காக கனடாவில் வாழும் இப்பாடசாலையின் முன்னாள் அதிபர் திருமதி பத்மாவதி சின்னராசா அன்பளிப்புச் செய்துள்ள 53 ஆயிரம் ரூபா நிதியை அவர் சார்பாக கொக்குவில் மேற்கு சனமூக நிலையச் செயலாளர் செ.சண்முகசுந்தரம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் முன்னிலையில் அதிபர் திருமதி மங்கள கௌரி தயாளநேசனிடம் கையளிக்கிறார்.



வலி.மேற்கு சுழிபுரம் பிரதேசத்தில் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு டெங்கு ஒழிப்பு பிரசாரமும், சிரமதானமும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி உரையாற்றுவதையும் [illegible] விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வை.எம்.சீ.ஏ.தலைவர் ரி. [illegible] ஜெயகுலராஜா அமர்ந்திருப்பதையும் காணலாம். *(படம்: இரா.சுதா)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை
இலவச
புலமைப்பரிசில்
பரீட்சை
அனுமதிகளுக்கு
விரையுங்கள் !
வெற்றி பெறுங்கள்.

Mega
கொம்ப்யூட்டர் கல்விக்கான
புலமைப்பரிசில் பரீட்சை
13.09.2009 (ஞாயிறு)
இலவச அனுமதிகளை
ASIAN COMPUTERS
யாழ்நகர், நெல்லியடி பயிற்சி
நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.


## கண்ணீர் அஞ்சலி



ஸ்ரீ அங்குசபாச (கீரிப்) பிள்ளையார் தேவஸ்தான பொருளாளரும் 11ஆம் திருவிழா (சங்காபிஷேகம்) உபய காரருமாகிய கணேசராஜா அவர்களின் அன்புத் தந்தை

**சங்கர் முத்தையா**

அவர்களின் மறைவால் துயர் அடைந்துள்ள அன்னாரின் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ அங்குசபாச(கீரிப்)பிள்ளையார் தேவஸ்தானம்
மற்றும் ஆலய குரு பிரம்மஸ்ரீ சு. பாலச்சந்திரசர்மா. (88752)

## 14 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் மழலையாய்
12 . 06 . 1979



விண்ணில் தெய்வமாய்
12 . 09 . 1995

**சிறீஸ்கந்தராசா றமேஸ்குமார்**
(மாணவன்-ஆண்டு 11, யாழ். யூனியன் கல்லூரி)

*அன்பின் பிறப்பிடமே அமைதியின் திருவுருவே*
*மலர்ந்த செந்தாமரை முகத்தவனே*
*உனக்காகக் காத்திருந்த உன்*
*எதிர்காலங்களெல்லாம்*
*கவிதைகளாகப் போனதடா*
*எல்லோர் இதயத்திலும் உன்னை நீ பதித்துவிட்டு*
*மின்னலாய் சென்றதேனோ?*
*ஈரேழு வருடங்களாகையிலும் உன்னை*
*நினைக்காத நாளில்லை...*

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.
தகவல்:
குடும்பத்தினர்.
(88786)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
21 ✱ 08 ✱ 1928



மறைவு
24 ✱ 08 ✱ 2008

திருமதி **செல்லம்மா ஐயாத்துரை**
திதி:அபரபக்க அட்டமி (12.09.2009)

காலங்கள் பிரிவின் துயரை மாற்றினாலும்
கனவிலும் நினைவிலும் பதிந்திருக்கும்
மாறாத அன்புருவம்- உங்களுடன்
வாழ்ந்த பசுமை நினைவுகளை என்றும்
நினைவூட்டும்

கந்தசாமி கோயிலடி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
குடும்பத்தினர்.
(88758)

# யாழ். மாவட்டப் பாடசாலைகளின் தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக் கிடையே நடத் தப்பட்ட தமிழ்த் தினப் போட்டியில் எழுத்தாக் கம் தவிர்ந்த ஏனைய போட்டி முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன.

போட்டிகளும், முதல்மூன்று இடங் களைப் பெற்ற மாணவர்களதும் பாடசாலை களினதும் விபரம் வருமாறு: ஒரு பகுதி நேற் றைய 'உதயனி'ல் வெளியாகியது.

**நடனம் தனி**

பிரிவு- 2 சி. அபித்திரா- யாழ் . இந்து மகளிர் கல்லூரி, சிவானந்தி சிவகணே சன்- கரவேட்டி விக்கினேஸ்வராக் கல் லூரி, சுஜீவா சிறிபவன் - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.

பிரிவு - 3 ஸ்ரீதரா வரதராசா - யாழ் வேம்படி மகளிர் கல்லூரி, அபிராமி நவ சுதன்- சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி, பபிலா இரவிச்சந்திரன்- சாவகச்சேரி இந் துக்கல்லூரி

பிரிவு -4 ஆரணி செல்வேந்திரகுமார் - உடுவில் மகளிர் கல்லூரி, செ. பிர வீணா- யாழ் வேம்படி மகளிர் கல்லூரி, மயூரதி மகேஸ்வரன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

பிரிவு - 5 கணேசலிங்கம் பவன்- இணுவில் மத்திய கல்லூரி, ச. நர்மதா - யாழ். இந்து மகளிர் கல்லூரி, நிலானி ஆனந் தராசா - சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி.

**நடனம் குழு**

பிரிவு - 1 சுன்னாகம் இராமநாதன் கல் லூரி, யாழ். இந்துக் கல்லூரி, புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்.

**நாட்டிய நாடகம் ஆடற்கதை**

திறந்த போட்டி- இணுவில் மத்திய கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, சாவகச் சேரி மகளிர் கல்லூரி, பருத்தித்துறை மெத டிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

**நாட்டார் பாடல்**

திறந்தபோட்டி- பருத்தித்துறை ஹாட் லிக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

**இலக்கிய நாடகம் திறந்தபோட்டி**

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, காரைநகர் கலாநிதி தியாக ராசா மகா வித்தியாலயம்.

**வில்லுப்பாட்டு**

திறந்த போட்டி- தெல்லிப்பழை யூனி யன் கல்லூரி, வல் வெட்டித்துறை சிவ குரு வித்தியால யம், யாழ்.இந்துக்கல் லூரி.

**விவாதம்**

திறந்த போட்டி- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, யாழ். இந் துக் கல்லூரி, தெல் லிப்பழை மகா ஜனாக் கல்லூரி.

**தமிழறிவு வினா விடைப் போட்டி**

திறந்தபோட்டி- தெல்லிப்பழை மகா ஜனாக்கல் லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, பருத்தித்துறை மெத டிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.

**நாட்டுக்கூத்து - சிந்துநடை**

அளவெட்டி அருணோதயாக்கல் லூரி, கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, வல்வெட் டித்துறை சிவகுரு வித்தியா லயம்.

**இசை நாடகம்**

இணுவில் மத் திய கல்லூரி, யாழ். வேம்படி மகளிர் கல் லூரி, ஊர்காவற் றுறை புனித மரியாள்.

**விசேட கூத்து**

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி, ஊர்காவற்றுறை புனித மரியாள் பாட சாலை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**தென்மோடி**

யாழ். திருக் குடும்ப கன்னியர் மடம் பாடசாலை, கரவெட்டி விக்கி னேஸ்வராக் கல்லூரி.

**வடமோடி**

கைதடி-நாவற் குழி, அ.த.க.பாட சாலை, ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தி யாலயம்.




கிருபாகரன் – கவினா தம்பதியினரின் செல்வப்புதல்வன் கிருஷான் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (12.09.2009) சனிக்கிழமை சாவகச்சேரியிலுள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். கிருஷானை அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, அக்கா, அண்ணா, மாமாமார், அத்தைமார்,பூட்டி அம்மம்மா மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருளால் பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

**தகவல்: திருமதி மகாலிங்கம் குடும்பத்தினர்**
**சரவணை மேற்கு, வேலணை.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

100 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



**உயர்திரு வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்**

(RTD P.W.D Oversear) இன்று (12.09.2009) சனிக்கிழமை தனது 100ஆவது அகவை காணும் புலோலி தெற்கு, புலோலியைச் சேர்ந்த முன்னாள் P.W.D ஓவசியர் எமது பாசமிகு ஐயா திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்களுக்கு உடல் நலம் மிக்க ஆயுளை ஆண்டவன் அருள வேண்டும் என மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: மக்கள்,மருமக்கள், சகோதர, பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்.

தகவல்: மகன் -
சு. தங்கநவமணிநாதன்,
புலோலி தெற்கு, புலோலி.
(அ/560858)



2009 A/L பரீட்சை செய்தவரா நீங்கள்?
நீங்களும் செய்திடலாம் BIT Degree !



BIT
Bachelor of Information Technology [BIT]
of
(University of Colombo)
உடன் தொடர்பு கொள்க: 0772365461, 0772365460
IDM
IDM Jaffna - No.216, Navalar Road, Jaffna.


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சதாசிவம் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்)



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட சின்னத்தம்பி சதாசிவம் 10.09.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - விசாலாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மக னும், கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த காலஞ் சென்ற மலாயன் பென்சனியர் பொன்னுத்துரை - அன்னம்மா தம்பதியரின் மருமகனும் பரமேஸ் வரியின் அன்புக் கணவரும் சிவகுமார் (டுபாய்), கிருஷ்ணகுமார், விஸ்ணுகுமார், செல்வகுமார், காங்கேயகுமார், சிவனேஸ்வரி, விக்னேஸ் வரி, சிவஞானேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் நித்தியானந்தன், குமரகுரு, தயா ளன், கமலபூசணி, பத்மலோஜினி, ஈஸ்வரி, நந்தா, காஞ்சனாதேவி ஆகியோரின் மாமனும் றஜித்தா, கபினா, கஸ்தூரன், காவியா, யாழினி, நவீன், சிமாளன், குகதாஸ், சபீன், ஜெனோதன், ஜெனீவன், நிலக்ஷன், ஹவிபிரசன்னா, ஹரிபிரசாத், ரமணன், நிலோதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஐயாத்துரை, காலஞ் சென்றவர்களான செல்லம்மா, பொன்னம்மா, இலட்சுமிப்பிள்ளை, நல்லம்மா ஆகியோ ரின் அன்புச் சகோதரனும் அமரர்களான கந்தையா, பூமணி மற்றும் முருகேச பிள்ளையின் மைத்துனரும் அமரர்களான நாராயணலிங்கம், நவசுந்தரலிங்கம், சண்முகப் பிள்ளை, மகேஸ்வரி, மங்கையற்கரசி மற்றும் மகாயோகேஸ்வரி, இராஜேஸ்வரி, உருத்திரசிங்கம் சோமசூரியசிங்கம், சுந்தரானந்தா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2009) சனிக்கிழமை ஒரு மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**S.செல்வகுமார் (மகன்).** (Accountant,
SRI LANKA Cement Corporation)

மானிமனை,
மில் லேன்,
மல்லாகம். (88787)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிறுப்பிட்டி மேற்கு பூமகள் முன்பள்ளி விளையாட்டு விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள்.
நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட ஈ.பி.டி.பியின் அச்சுவேலி இணைப்பாளர் எஸ்.வி.எம்.தர்மராசா, முன்பள்ளித் தலைவர் ஆ.பொன்வாசன் ஆகியோர் உரையாற்றுவதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட புத்தூர் பிரதேசசபைப் பொறுப்பதிகாரி திருமதி கோ.வ.தமிழ்ச்செல்வன் வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் சிறுவர்களின் விளையாட்டு நிகழ்வின் ஒரு காட்சியையும் படங்களில் காணலாம்.

# விழிப்புலனற்றோருக்கு விழியாக இருந்து உதவியவர்



செல்வி சின்னத்தம்பி அன்னலட்சுமி அவர்கள் விழிப்புலவலுவிழந்த பிள்ளைகளுக்கு விழியாக இருந்து அவர்கள் வாழ கல்வி என்னும் கண் மூலம் உயர்வடையச் செய்தவர். இந்த அன்னை ஆற்றிய சேவையை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது.

அன்னலட்சுமி அம்மா மாவிட்டபுரத்திலே சின்னத்தம்பி தையல்நாயகி தம்பதியினரின் கடைசிப் புதல்வியாகப் பிறந் தார். 1972இல் சேவையை ஆரம்பித்தவர். ஒருமுகப்படுத்திய கல்வி அறிமுகப்படுத்தப்பட்டபோது அந்த குழுவிலே அவரும் ஒருவரானார். சேவையையே தனது நோக்காகக் கொண்டு இறுதி மூச்சுவரை வாழ்ந்தவர். இடப்பெயர்வு போன்று எத்தனையோ சோதனைகள் வந்தபோதும் மனம் தளராது தனித்து நின்று பல இடங்களிலும் மாணவர்களைக் கூட்டிச் சென்று வாடகை வீடுகளிலும் வாழ்வகத்தை நடத்தி மாணவர்களுக்கு கல்வியை ஊட்டியவர். இந்த அன்னை புரட்டாதி மாதம் 11ஆம் திகதி 2006ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை விட்டு இறையடி சேர்ந்தாலும் எல்லோர் மனதிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். மாணவர்களைத் தேடி அவர்களின் ஆற்றல்களைக் கண்டு பிடித்து அந்த ஆற்றல் மூலம் உயர்வடையச் செய்தவர். தனித்து நின்று தன் முயற்சியால் எல்லோருக்கும் வழங்கிய கல்வி என்னும் சேவையை மறக்க முடியாது. சிரித்த முகத்துடன் வாழ்வகம் வருவோரை வயது வேறுபாடின்றி வரவேற்று உபசரித்து மிகவும் மகிழ்வடையச் செய்வார். கம்பன் கழகத்திலே அகில இலங்கையில் சிறந்த சேவையாளராக அம்மாவைக் கௌரவித்தனர். வாழ்வக மாணவர்களின் கண் இந்த அன்னையே. அவர் தனது காலத்திலே கற்ற மாணவர்களை கல்விமான்களாக ஆக்கினார். அவர்களுள் பலர் கலாசார உத்தியோகத்தர்களாகவும், ஆசிரியர்களாகவும் பிரகாசித்து வருகின்றனர்.

ஸ்ரனிஸ் அற்புதராஜ் என்ற மாணவன் தமிழ் பேசும் முதலாவது விழிப்புலனற்ற சட்டத்தரணியாகப் பதவிப்பிரமாணம் செய்து சேவையாற்றி வருகிறார். ஜெகதீசன் அன்னையின் ஆசைப்படி இன்று சங்கீதத் துறையில் சிறந்த முறையில் தன் திறனைக் காட்டி வருகிறார். இன்று பலர் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வருகின்றனர். தற்போதும் ஒரு மாணவி உயர்தர பரீட்சையினை எழுதியுள்ளார். அன்னை இவ்வுலகில் இல்லாவிட்டாலும் வாழ்வக வளாகத்தினுள் வாழ்ந்து கொண்டு இம்மாணவர்களை ஆசீர்வதித்துக் கொண்டுதான் இருக்கிறார். "மாந்தராகப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திட வேண்டும்" என்ற கூற்றுக்கு உயிர்கொடுத்தவர் இந்த அன்னை. இம் மண்ணில் அரும்பணியை செய்து வந்தவர். எம் எவராலும் செய்ய முடியாத பணியை செய் தார். அம்மா அவர்கள் ஆற்றிய சேவைகள் எப்போதும் அவரின் பெயரை நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கும்.

[விழிப்புலனற்றோர் இல்லத்தை அர்ப்பணிப்புணர்வுடன் நிர்வகித்து வந்து, கடந்த 2006 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதியன்று இறையடி சேர்ந்த செல்வி சின்னத்தம்பி அன்னலட்சுமி அவர்களது 3 ஆவது நினைவு தினம் நேற்றாகும். அதனையொட்டி இவ் ஆக்கம் பிரசுரமாகிறது]

சுபோதினி சபாரத்தினம்,
மானிப்பாய்.

## மக்கள் மாண்பு

# மனிதரில் மனிதன்

[நாவலப்பிட்டி ஆத்மஜோதி முத்தையா அவர்கள் 1996 செப்ரெம்பர் 08 ஆம் திகதி அமரத்துவம் அடைந்த தினமாகும். அவரது 13ஆவது நினைவுதினம் இம்மாதம் 08 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. காலஞ்சென்ற பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் [நந்தி] அவர்கள் ஆத்மஜோதி முத்தையா ஐயா அவர்கள் குறித்து எழுதிய கட்டுரையிலிருந்து ஒரு பகுதி அவரது நினைவாக இங்கு பிரசுரமாகிறது.]



ஆத்மஜோதி முத்தையா மாஸ்றரின் தத்துவக் கதைகள் என்ற நூலுக்கு அணிந்துரையில் பின்வருமாறு எழுதினேன்:

மனிதரில் மாணிக்கம், மனிதரில் தெய்வம் என்றெல்லாம் கூறக் கேட்டிருக்கிறோம். அவை எல்லாம் வேண்டாம். மனிதரில் மனிதனாகவே இருந்தால் போதும் என்ற தத்தவம் தான் கதைகளைப் படித்து முடிந்ததும் எனது மனதில் கருக்கொண்டது.

அவர் எழுதிய தத்துவக் கதைகளுக்கும் போதித்த ஆத்மீகப் போதனைகளுக்கும் ஏற்ப வாழ்ந்தவர் ஆத்மஜோதி. ஆசிரியராக, கல்லூரி அதிபராக, நிறுவனம் ஒன்றின் தலைவராக, தொழிற்சங்க நிருவாகியாக, எழுத்தாளனாக, ஆத்மீகப் பத்திரிகை ஆசிரியராக, சமய போதகராக, மேடை, ரேடியோப் பேச்சாளராக, பாத யாத்திரிகராக எனப் பன்முக சமூக வாழ்க்கையில், அதன் துரித இயக்கத்தில் எவ்வண்ணம் பக்தி, ஞானம், யோகம் என்பவற்றின் மார்க்கங்களைக் கடைப்பிடிக்க முடியும் என்று எமக்குக் காட்டியவர் அவர். இந்த மார்கங்களை அனுசரித்து சமூக ஆத்மீக விஞ்ஞானியாகவே வாழ விரும்பினார். சுவாமியாக அல்ல. அதற்குக் காரணம் அவரே கூறுகின்றார்.

"காவியுடை அணிந்தால் மக்கள் மேலான சுவாமி என எண்ணுவார்கள். அத்தகைய எண்ணம் மக்களிடமிருந்து என்னைப் பிரித்துவிடும். மக்களுடன் சேர்ந்து அவர்களது குறை, நிறைகளை நேரிற் கண்டறிய முடியாது. மக்களின் குறை நிறைகளைச் செவ்வனே அறியாமல் அவர்களுக்குச் சேவை செய்ய முடியாது?"

ஆத்மஜோதி முத்தையா அவர்களுடைய நூல்கள் சமயக் கட்டுரைகள், கதைகள், வாழ்க்கை வரலாறுகள், பிரயாண அனுபவங்கள் அடங்கியன. அவர் தெளிவான சிந்தனையுள்ள ஆன்மீக எழுத்தாளர். அவரது எழுத்துக்களில் தனது புலமையைப் பெரிதாக்கிக் காட்டுவது அவரது நோக்கமாக இருக்கவில்லை. மக்கள் ஆன்மீக அறிவை மகிழ்ச்சியுடன் பெற்று அதை அனுபவிப்பதே அவர் குறிக்கோளாக இருக்கும். எழுத்திலும் பார்க்க மென்மையும், மேன்மையும் கொண்டவை அவருடைய பேச்சுக்கள். பேச்சுக்களிலே அன்பின் அரவணைப்பு இருக்கும். அவர் சென்ற நாடுகளில் எல்லாம், மக்கள் அவரால் கவரப்பட்டார்கள் என்றால் அதற்குக் காரணம் அவரது ஆத்மீக அன்பின் ஆளுமைதான். அந்த அன்பு அவர் வாழ்வின் அடிநாதம். அவருக்கு ஆத்மஜோதிக்கு அடுத்ததாக அன்புமணி என்ற காரணப் பெயரே பொருத்தமாகும்.

மலைநாட்டு மக்களின் கவலை மட்டுமல்ல, தமிழ் மக்களின் கவலை, அவர்கள் எங்கிருந்தாலும் ஆத்மஜோதியைச் சிந்திக்க வைத்தது. அதற்கு மருந்து ஆன்மீக அறிவும் ஒழுக்கமும், பொறுமையும், ஒற்றுமையும் என நம்பினார். அவர் ஒரு முற்போக்கு சிந்தனையாளர். அவருடைய நூல் நிலையத்தில் சைவசமய நூல்கள் மட்டுமல்ல, முதற்றரமான சிறுகதைத் தொகுப்புகளும் நாவல்களும் இருக்கும். பைபிளும் குரானும் இருக்கும். அவர் எந்த மதத்தினதும் எதிரி அல்ல. சைவத்தின் மாண்புகளை எடுத்துக் கூறுவது, மற்ற மதங்களை எதிர்ப்பது அல்ல என்ற எண்ணம் கொண்டவர். அவரது சைவசமய போதனைகள் நீர்வீழ்ச்சிபோல் தீவிரமாக இருந்ததில்லை. ஊரின் ஓரமாக ஓடும் சிறுகிளை ஆறுபோல் இருக்கும். மாஸ்றரின் வாழ்வு இலங்கை வாழ் தமிழ் மக்களின் சரித்திரத்தில் ஒரு இனிய பக்கம். எப்படி ஒரு கிராமத்தில் சாதாரண குடும்பத்தில் பிறந்த ஒருவர், தமிழ் உபாத்தியாயராக இருந்து இறந்து போகாமல் தொழிற்சங்க ஈடுபாடு, பத்திரிகை நடத்துதல், வெளிநாட்டுப் பயணம் முதலியவற்றில் தேர்ச்சி பெற்று, நமது நாட்டின் ஆன்மீக வழிகாட்டி என்று மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சரித்திரம் அவருடையது. வரும் சந்ததியினர் அவரைப் பற்றித் தெரிந்து பயனடையச் செய்வது எமது கடமையாகும்.

21 ஆம் நூற்றாண்டில் ஆத்மஜோதியின். பெயரும், பெயர்கொண்ட அந்த வாழ்வும், வாழ்வின் போதனைகளும், போதனைகளின் போஷாக்கும் எமது மக்களிடை[illegible] தரும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

# சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சண்டிலிப்பாயில் புத்தாக்கக் கண்காட்சி

நவாலி, செப்.12

சர்வதேச சிறுவர் தினம் எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு பிரதேச மட்டத்தில் பிரதேச சிறுவர் சபை மூலம் புத்தாக்கக் கண்காட்சியொன்று நடத்தப்படவுள்ளது. அதில் வெற்றி பெறும் முதல் 3 இடங்களைத் தெரிவு செய்து மாவட்ட மட்டத்தில் அவர்களது ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இது சம்மந்தமாக சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி புத்தாக்கக் கண்காட்சியொன்று நடத்தப்படவுள்ளது.

இப்பிரிவைச் சேர்ந்த அனைத்துச் சிறுவர் கழக அங்கத்தவர்களையும் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ்.சத்தியவாணியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(203-100)

# 15வயதைத் தாண்டிய மாணவர்களை ஆலயங்களில் காண்பது குறைவாகவுள்ளது

யாழ்ப்பாணம், செப்.12

இன்றைய காலத்தில் 15 வயதைத்தாண்டிய கல்வி கற்கின்ற மாணவர்களை ஆலயங்களில் காண்பது மிகக் குறைவாகவே உள்ளது. தொலைக்காட்சிகளும் கையடக்கத் தொலைபேசிகளும் இதற்குக் காரணமாக அமைகின்றன. இதனால் மாணவர்கள் தம் கல்வித் தரத்தில் உயர்வடையாதிருக்கின்றனர்.

இவ்வாறு கூறியுள்ளார் சரசாலை நுணாவில் சிதம்பரவிநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் க.சிவசுங்கரநாதன்.

மேற்படி ஆலய மணவாளக்கோல தினத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

பாடசாலைகளில் சமயக்கல்வி முறையாகப் போதிக்கப்படவேண்டும். இதற்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். பிள்ளைகளுக்குப் பிறந்தநாள் கொண்டாடுவது போல ஆலயங்களில் ஓர் விக்கிரகத்தை பிரதிஸ்டை செய்து கும்பாபிசேகம் நடைபெற்ற தினத்தை மணவாளக்கோல தினமாக கொண்டாடுவது வழக்கம். இந்த ஆலயத்தில் அது சிறப்பாக நடைபெறுகிறது- என்று கூறியுள்ளார்.

(203- 7)

# எழுத்தறிவு தினமும் பரிசில் வழங்கலும்

நவாலி, செப்.12

வலிகாமம் வலய முறைசாரக் கல்விக் பிரிவு கடந்த 4ஆம் திகதி சர்வதேச எழுத்தறிவு தினத்தையும் பரிசளிப்பு நிகழ்வையும் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் நடத்தியது.

அதிபர் ந.சிவகடாச்சம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் த.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற திட்டமிடல் உத்தியோகத்தர் க.செல்லையாவும் கலந்து கொண்டனர்.

இதில் வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த 8 பாடசாலைகள் கலந்து கொண்டு நாடகம், பேச்சு, பாட்டு ஆகிய போட்டிகளில் பங்குபற்றின.

(203-100)

## வாசகர் திருமுகம்

# குமுறும் தொண்டர் ஆசிரியர் ஒருவர்

வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் யாழ். மாவட்ட கல்வித்துறை சார்ந்த நடமாடும் சேவையும், கல்வித்துறைசார்ந்த அபிவிருத்தி, அது சம்பந்தமான தேவைகள், முறைப்பாடுகள் எல்லாம் பாடசாலை ரீதியாக, வலயரீதியாக நடத்தப்பட்டு வருகின்றது.


ஒரு பாடசாலையில் எட்டுப் பத்து வருடங்களாக தொடர்ந்து சேவைசெய்யும் தொண்டர் ஆசிரியர்களின் உள்ளக் குமுறல்களையும், வேதனைகளையும் கேட்பார் யாரும் இல்லையா?.... அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒருவர் மட்டுமே எங்களைத் திரும்பிப் பார்க்கின்றார். அவரையும் எமது நியமனங்களைப் பெற்றுத்தர தடுக்கும் கல்வி அதிகாரிகள் இருக்கிறார்கள்.

2005.12.31ஆம் திகதிக்கு முன் மூன்று வருடங்கள் பூர்த்தியாக்கப்பட்ட அனைத்துத் தொண்டராசிரியர்களுக்கும் நியமனம் பெற்றுத் தருவதாகக் கூறப்பட்டு நேர்முகத்தேர்வும் நடத்தப்பட்டது. ஆனால் நடந்தது என்ன? இன்று நேற்று பாடசாலை சென்றவர்களின் பெயர்களே பெயர்ப்பட்டியலில் உள்ளன. எட்டுப் பத்து வருடங்களாக மாடாய் உழைத்த தொண்டர் ஆசிரியர்களின் பெயர்களோ தகுதியற்றவர்களின் பெயர் பட்டிய்லில். இது நியாயமா? ... வடமராட்சியில் ஒரு பாடசாலையில் தொடர்ந்து நான்கு வருடங்களாகப் படிப்பித்த ஆசிரியரின் பெயர் வரவில்லை. அந்தப் பாடசாலைக்கு ஒரு நாளும் வராத ஒரு ஆசிரியரின் பெயர் பட்டியலில் வந்துள்ளது. இது எப்படி நடந்தது என்று விசாரித்தால் புகையிலையின் புகைபோல பல விடயங்கள் வெளிவந்து விடும்.


கல்வி அபிவிருத்தி என்றால் எம்போன்ற உள்ளக் குமுறல்களோடு இருக்கும் தொண்டர் ஆசிரியர்களின் அபிவிருத்திகளையும் கவனியுங்கள். வடக்கின் வசந்தத்தின் கீழ் எங்களையும் உயிர் உள்ள ஜீவன்களாக மதித்து இச்சேவையைச் செய்யுங்கள்! எங்களின் குறைகளை செவி சாய்த்து அமைச்சரின் ஊடாக யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்களைச் சந்தித்து எங்கள் வாழ்விலும் வசந்தங்கள் பிறக்க ஒரு வழி காட்டுங்கள்.

பாதிக்கப்பட்ட தொண்டர்
ஆசிரியர்களின் சார்பில் ஒருவர்.
கே. வசந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றது.
சுவாமி தேருக்கு எழுந்தருளுவதையும் தேரில் ஆரோகணித்து வீதியுலா வருவதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.
அடியவர்கள் அங்கப்பிரதிஷ்டை செய்வதை மூன்றாது படத்தில் காணலாம்.
(படங்கள்: சரவணன்)

# அவசரகாலச் சட்ட வாக்கெடுப்பை புறக்கணித்து வெளியேறியது ஜே.வி.பி.

அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிப்பதற்கான வாக்கெடுப்பை நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி புறக்கணித்தது. நேற்று முன்தினம் மாலை அவசரகாலச் சட்டம் மீதான விவாதம் நிறைவடைந்து அது வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்கா, தமது கட்சி அதனைப் புறக்கணித்து வெளிநடப்புச் செய்கிறது என்று அறிவித்தார்.

பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்காக கொண்டு வரப்பட்ட அவசரகாலச்சட்டம் ஜனநாயகத்தை நசுக்குவதற்காகவும் பயன் படுத்தப்படுகிறது என்று அவர் குற்றம் சாட்டினார். இதனையடுத்து ஜே.வி.பி உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் சபையை விட்டு வெளியேறினர்.

அவசரகாலச் சட்டம் 87 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. அரசு, விமல் வீரவன்ஸ அணி, இ.தொ.கா., ம.ம.முன்னணி ஆகியன அவசரகாலச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்தன. ஆதரவாக 100 வாக்குகள் விழுந்தன. தமிழ் தேசியக் கூட்டமைப்பு மாத்திரம் எதிர்த்து வாக்களித்தது. எதிராக 13 வாக்குகள் விழுந்தன.

ஐ.தே.கா. முஸ்லிம் காங்கிரஸ் ஜே. வி.பி. ஆகியனவாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

## வடமாகாண விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடல்

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ள இவ்வாண்டுக்கான விளையாட்டுப்போட்டி தொடர்பான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் க.கணேஷ் தலைமையில் நடைபெறவுது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாநகர சபை ஆணையாளர், பொறியியலாளர், இலங்கை மின்சாரசபையின் யாழ்.மாவட்ட பிரதிப் பொது முகாமையாளர், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட உதவி ஆணையாளர், யாழ்.உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் ஆகியோரையும் காரைநகர் வேலணை பிரதேசக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள், யாழ்.பனம்பொருள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், வணிகர் கழகத்தலைவர், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம், வலிகாமம் கல்வி வலய விளையாட்டுத்துறையின் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் வேம்படி மகளிர் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை, திருக்குடும்ப கன்னியர்மடம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சென்.சாள்ஸ், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, இராமநாதன் மகளிர் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தலைவர், யாழ்.மெய்வல்லுநர், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கிரிக்கெட் (மென் பந்து) சங்கங்களின் தலைவர், செயலாளர்கள் ஆகியோரையும் கலந்துகொள்ளுமாறு யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

(203-201)

# சாவகச்சேரி நகரிலுள்ள வர்த்தக நிலையங்களை ஞாயிற்றுக் கிழமைகளில் பூட்டத் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப்.12

சாவகச்சேரி நகரப்பகுதி வர்த்தக நிலையங்களில் அத்தியாவசிய கடைகள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் பூட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் இது நடைமுறைக்கு வரவுள்ளதாக சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் ப.பாலேந்திரா அறிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்ற செயற்குழுக்கூட்டத்தில் மேற்படித் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மனறத் தலை வர் அறிவித்துள்ளார்.

இதேவேளை சாவகச்சேரி நகரப்பகுதியில் புதிதாகக் கடைகள் ஆரம்பிப்பிதாயின் மேற்படி கைத்தொழில் வணிக மன்றத்திடம் ஒரு கிழமைக்கு முன்னர் அனுமதி பெற வேண்டும் எனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

(203-201)


IDM

நாம் உங்களையும்....

வெற்றியாளராக்குவோம்!

தலைநகர் கொழும்பில் 2000ற்கும் மேற்பட்ட BIT மற்றும் BCS மாணவர்களுக்கு கற்பித்த நாம், நாம் வகித்த உயர் பதவிகளை கைவிட்டு உங்கள் நன்மைக்காக யாழ் வந்துள்ளோம்.....







**BIT Gold Medals / BCS World Prizes**

வென்ற மாணவர்களுக்கு கற்பித்த நான் உங்களையும் வெற்றியாளராக்க முடியும்.

*- Mr.Ragukumar S.T*

எம்மிடம் கற்க விரும்பும் மாணவர்கள் No 216, Navalar Road இல் உள்ள **IDM** கட்டிடத்தில் மட்டுமே பதிவுகளை செய்து கொள்ளவும்.

பணிவான அறிவித்தல்.........!

**வேறு எந்த முகவரியிலும்/எந்த பெயரிலும் இயங்கும் நிறுவனத்திலும் செய்யப்படும் கட்டணங்களுக்கு நாம் பொறுப்பேற்க மாட்டோம்.**

☎ தொடர்புகளுக்கு : 0772365461 / 0772365460

யாழ் மண்ணில் எங்கு செல்லினும் IDM ஊடாக மட்டுமே!


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ராகுலின் தமிழக சுற்றுப்பயணத்தால் காங்கிரஸில் உருவானது பேரெழுச்சி

## தமிழக காங். தலைவர் தெரிவிப்பு

சென்னை, செப். 12

அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் காந்தியின் தமிழக சுற்றுப் பயணம், காங்கிரஸ் கட்சியில் பேரெழுச்சியை ஏற்படுத்தியிருக்கிறது - என்று தமிழகக் காங்கிரஸ் தலைவர் கே.வீ.தங்கபாலு கூறியிருக்கிறார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்மேலும்தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இளைய சமுதாயத்தின் இணையற்ற தலைவர் ராகுலின் கடந்த மூன்று நாள்கள் சூறாவளிச் சுற்றுப்பயணம் தமிழகத்தில் பேரெழுச்சியை உருவாக்கிய வரலாற்று நிகழ்ச்சியாகும்.

ராகுலின் சுற்றுப்பயணத்தில் தாழ்த்தப்பட்ட, சிறுபான்மை மக்கள், விவசாயிகள், மீனவர்கள், நெசவாளர்கள், அனைத்து தரப்பான தொழிலாளர்கள் உட்பட குறிப்பாக பெண்கள் ஆகிய தமிழ் சமுதாயத்தின்



பல்வேறு பிரிவினரையும் தனித்தனியாகவும், குழுக்களாகவும் சந்தித்து அவர்களது நிலைமைகளை அறிந்தோடு, அவர்களது வாழ்க்கை மேம்பாட்டிற்கு வழி காணும் தனது விருப்பத்தையும் அவர் பகிர்ந்து கொண்ட நிகழ்ச்சிகளை நாம் நேரில் பார்த்தோம்.

தமிழகத்தில் காங்கிரஸ் மேலும் வலிமை பெற்று சோனியாவின் தலைமைக்கு அணி சேர்க்கும் வண்ணம் முதல் இயக்கமாக மாற வேண்டும் என்ற விருப்பத்தையும், மீண்டும் தமிழகத்தில் காங்கிரஸ் தலைமையில் நல்லாட்சி அமைய வேண்டும் என்ற எண்ணத்தையும் கோவை பொதுக்கூட்டத்தில் அவர் அறிவித்த கருத்து மிகச்சிறந்த எழுச்சியை உருவாக்கியுள்ளது. தமிழ் மக்கள் நலன் கருதி இளைஞர்களோடும், மக்களோடும் காங்கிரஸ் பேரியக்கத்திற்கு நல்லிணக்கத்தை உருவாக்கிட ராகுல் எடுக்கும் அரும்பெரும் முயற்சிக்கு தமிழ்நாடு காங்கிரஸ் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, சோனியா ஆகியோர் மீது எந்த அளவிற்கு பாசத்தை பொழிந்தார்களோ அதைவிடவும் கூடுதலான நேசத்தோடு ராகுலுக்கு வரவேற்பு வழங்கிய மக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி - என்றுள்ளது.

# ஆந்திர மாநில முதலமைச்சர் யார்? பிரதமருடன் சோனியா ஆலோசனை

டில்லி, செப். 12

ஆந்திர மாநில முதல்வராக யாரை நியமிப்பது என்பது குறித்து பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்ட உயர்மட்ட தலைவர்களுடன் சோனியா காந்தி ஆலோசனை நடத்தினார்.

ஆந்திரா மாநில முதல்வர் ராஜசேகர ரெட்டி ஹெலிக்கொப்டர் விபத்தில் பலியானதைத் தொடர்ந்து அவரது மகனும், கடப்பா தொகுதி எம்.பியுமான ஜெகன் மோகன் ரெட்டியை முதல்வராக நியமிக்க வேண்டும் என்று பலத்த கோரிக்கை எழுந்தது.

ஆந்திர அமைச்சர்கள், எம்.பிக்கள், எம்.எல்.ஏ.க்கள் மற்றும் காங்கிரஸ் தொண்டர்கள் மத்தியில் ஜெகன் மோகன் ரெட்டிக்கு ஆதரவு வலுவாக உள்ளது.

ராஜசேகர ரெட்டியின் முக்கிய உதவியாளரும், அவரது குடும்பத்துக்கு மிகவும் நெருக்கமானவருமான கே.வி.பி.ராமச்சந்திரராவ், ஜெகன் மோகன் ரெட்டிக்கு ஆதரவான இயக்கத்தை முன்னின்று நடத்தி வருகிறார். அவர் கடந்த புதனன்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியைச் சந்தித்து இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினார்.

# ஆள் வளர்ந்தளவுக்கு அறிவு வளரவில்லை ராகுல் மீது கம்யூ. பாண்டியன் பாய்ச்சல்!



சென்னை, செப். 12

தேசிய நதிகளை இணைப்பது சுற்றுச் சூழலுக்கு ஆபத்து என்று சின்னப்பிள்ளைத் தனமாகக் கூறும் ராகுல் காந்தியை, ஆள் வளர்ந்த அளவுக்கு அறிவு வளரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும் - என்று இந்திய கம்யூனிஸ்ட் தமிழ் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் -

நதிகள் இணைப்பு பற்றி செய்தியாளர்களின் கேள்விகளுக்கு டில்லி செல்லும் அவசரத்தில் ராகுல் காந்தி பதில் சொல்லிவிட்டு போய்விட்டார். இது எந்த அளவுக்கு நாட்டைப் பாதிக்கும் என்று தெரியவில்லை.

ஆள் வளர்ந்த அளவுக்கு அறிவு வளரவில்லை என்றுதான் ராகுல்காந்தியைச் சொல்ல வேண்டும். நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் நதிகளை இணைக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றன.

ஒவ்வொரு தேர்தல் சமயத்திலும் அரசியல் கட்சிகள் தேர்தல் அறிக்கையிலேயே நதிகள் இணைப்பு பற்றிக் குறிப்பிடுகின்றன. ஆனால் ராகுல் காந்தி சின்னப்பிள்ளைத்தனமாக நதிகளை இணைப்பது சுற்றுச் சூழலுக்கு ஆபத்து என்று கூறுகிறார். இது சரியல்ல.

நதிநீர் இணைப்பு இல்லையென்றால் குறைந்த காலத்தில் தமிழகம் பாலைவனமாகி விடும். ராகுலின் இந்தக் கருத்தை தமிழக முதல்வர் ஆதரிக்கிறாரா? இதுகுறித்து முதல்வர் பதில் சொல்லியாகவேண்டும் - என்றார்.

# இலங்கைப் படை தாக்குவதைத் தடுக்க மீனவருக்குத் தனி அமைச்சு இல்லை

## மத்திய அரசு முடிவு; ராகுலின் உறுதி புஸ்வாணம்

டில்லி, செப். 12

மீனவர்களுக்குத் தனி அமைச்சு அமைக்க முடியாது என்று மத்திய அரசு நேற்றுமுன் தினம் அறிவித்தது.

தமிழகத்தை சேர்ந்த மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லும்போது இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுகின்றனர். எனவே, மீனவர்களின் பிரச்சினையை கவனிப்பதற்காக மத்திய அரசில் மீன்வளத் துறைக்கென தனி அமைச்சு உருவாக்க வேண்டும் என்ற இந்தக் கோரிக்கையை, தமிழகத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட ராகுலிடம் மீனவர் முன்வைத்தனர்.

அதற்கு அவர், 'விரைவில், மீனவர்களுக்காக தனி அமைச்சு மத்திய அரசில் அமைக்கப்படும்' என்று உறுதி அளித்தார்.

ஆனால், மீனவர்களுக்கு தனி அமைச்சு அமைக்க முடியாது என்று மத்திய அரசு நேற்றுமுன்தினம் அறிவித்தது.

இதுதொடர்பாக கேரள எம்.பி. வேணுகோபாலுக்கு பிரதமர் அலுவலக விவகார இணை அமைச்சர் பிருத்விராஜ் சவுகான் அனுப்பிய கடிதத்தில் -

கால்நடை, மீன்வளம் ஆகியவற்றுக்காக மத்திய வேளாண் அமைச்சகத்தின் கீழ் தனி அதிகாரம் படைத்த துறைகள் ஏற்கனவே உள்ளன. மீனவர்களின் மேம்பாட்டுக்காக 1550 கோடி ரூபா செலவில் தேசிய மீன்வள வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு அமைச்சகம் செய்யும் பணிகளை அந்த வாரியமே மேற்கொண்டு வருவதால் மீனவருக்காக தனி அமைச்சு அமைக்க முடியாது - என்று கூறினார்.



டில்லியில் அரச பாடசாலை வளாகத்தில் தேங்கிக் கிடந்த வெள்ள நீரில் மின்கசிவு ஏற்பட்டுள்ளது எனப் பரவிய வதந்தியால் மாணவிகள் தப்பி ஓட முயன்றபோது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 5 பேர் பலியானார்கள். இதையடுத்து ஆத்திரத்தில் பாடசாலையை முற்றுகையிட்ட பெற்றோரைத் தடுத்த பொலிஸாரிடம் ஒரு மாணவியின் தாய் ஆவேசமாக வாக்குவாதம் செய்வதையும், பின்னர் மாணவிகள் பாதுகாப்பாக - வரிசையாக வெளியேற்றப்படுவதையும் யும் படங்களில் காணலாம்.

## பாதிக்கப்பட்ட குடும்பமே மன்னித்துள்ள நிலையில்

# தம்மை விடுதலை செய்யக் கோரி உயர் நீதிமன்றத்தில் நளினி மனு

சென்னை, செப். 12

ராஜீவ்காந்தி கொலைக் கைதி நளினி, பாதிக்கப்பட்ட குடும்பமே தன்னை மன்னித்துள்ள நிலையில் தம்மை விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி சென்னை உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

நளினி தாக்கல் செய்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை கைதியாக வேலூர் பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளேன். கடந்த 18 வருடமாக நான் சிறையில் உள்ளேன். இதற்கிடையே 14 ஆண்டுகள் முடிந்த பின்னர் ஆயுள் தண்டனை கைதியான என்னை விடுதலை செய்யவேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தேன். ஆனால் எனது விடுதலை குறித்து மறு ஆய்வு செய்யும்படி ஆலோசனை வாரியத்திற்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும் ஆயுள் கைதிகளுக்கான ஆலோசனை வாரியத்தை மறுசீரமைப்பு செய்யும்படி உத்தரவிட்டது. இந்த உத்தரவு பிறப்பித்து ஒரு வருடமாகியும் எந்த நடவடிக்கையும்



எடுக்கப்படவில்லை. என்னை விடுதலை செய்யவும் இல்லை.

நான் ஏற்கனவே சோனியாகாந்திக்கு இது குறித்து கோரிக்கை மனு அனுப்பியுள்ளேன்.

இதற்கிடையே ராஜீவ் காந்தியின் மகள்பிரியங்கா என்னை வேலூர் சிறையில் நேரில் சந்தித்தார். அப்போது நடந்த சம்பவங்களை மறந்து என்னை மன்னித்து விட்டார் எனக் கூறினார். பாதிக்கப்பட்ட குடும்பமே என்னை மன்னித்துள்ள நிலையில் விடுதலை செய்ய மறுக்கின்றனர்.

43 வயதான எனக்கு 18 ஆண்டுகள் சிறை வாழ்க்கை கழிந்து விட்டது. என்னை முன் கூட்டியே விடுதலை செய்ய வேண்டும் - என்று அதில் உள்ளது.

இந்த மனு மீதான விசாரணை எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# தீவிரவாதத்தை ஒழிப்பது பற்றி இந்தியா வங்கக் கடற்பகுதி நாடுகளுடன் ஒப்பந்தம்

## மத்திய அமைச்சரவை ஒப்புதல்

டில்லி, செப். 12

வங்கக்கடல் பகுதி நாடுகளுடன் தீவிரவாத ஒழிப்பு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடுவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கி உள்ளது.

வங்கக் கடல் பகுதி நாடுகள் இணைந்து பல்துறை தொழில்நுட்ப, பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பை கடந்த 2004ஆம் ஆண்டில் தொடங்கின. இதில், இந்தியா, பங்களாதேஷ், மியான்மர், இலங்கை, தாய்லாந்து, பூட்டான், நேபாளம் ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. தீவிரவாதத்தை ஒழிக்கவும், போதை மருந்துக் கடத்தலைத் தடுக்கவும் இந்த நாடுகள் தீர்மானித்துள்ளன.

இதுதொடர்பான தீர்மானத்துக்கு டில்லியில் நேற்றுமுன்தினம் நடந்த மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும், இதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடவும் அமைச்சரவை அனுமதி வழங்கியது.

இந்த ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடுவது, தீவிரவாதத்தை ஒழிக்க வலுவான சட்டக் கட்டமைப்பையும், பாதுகாப்புப் படையினருக்கு உத்வேகத்தையும் அளிக்கும் என்று மத்திய தகவல் ஒளிபரப்பு துறை அமைச்சர் அம்பிகா சோனி தெரிவித்தார்.

# பாரதியாரை தேசியக் கவியாக அறிவிக்க மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்குக!

## தமிழக அரசிடம் பா.ஜ.க. வலியுறுத்து

சென்னை, செப்.12



மகாகவி பாரதியாரை தேசிய கவியாக அறிவிக்க தமிழக அரசு முயற்சி எடுக்க வேண்டும், மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் - என்று தமிழக பா.ஜ.க. தலைவர் இல.கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு -

தமிழர்களின் மகாகவி சுப்பிரமணிய பாரதியின் சிந்தனையும், எழுத்தும் நாடு [illegible] சுதந்திரத்துக்கான அவரது போராட்டம் கவிதையோடு நின்றுவிடவில்லை.

அவரது புகழ்பாடும் கடமை நாட்டு மக்களுக்கு உண்டு. தேசிய கீதம், தேசிய சின்னம், தேசியக்கொடி, தேசிய பறவை என்றெல்லாம் இருக்கும் போது தேசிய கவி மட்டும் இல்லை.

இந்த விடயத்தில் தமிழக அரசு முனைப்பு காட்டி, பாரதியாரை தேசிய கவி என அறிவிக்க மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்.

சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி டில்லிக்கு அனுப்ப வேண்டும். சென்னையில் பாரதி இலலம் சேதமடைந்து உள்ளது. சீரமைப்பு பணிகள் எப்போது முடியும்? இதற்கு பின்னர் கூட்டங்கள் நடத்த அனுமதி தரப்படுமா?. இவற்றை தமிழக அரசு தெளிவுபடுத்த வேண்டும். ஒக்ரோபர் 11ஆம் திகதிக்குள் பாரதி இல்லம் செயற்பாட்டுக்கு வராவிட்டால் பாரதி பக்தர்களை ஒன்று திரட்டி போராட்டம் நடத்தப்படும் - என்றுள்ளது.

# 'காதல் மன்னன்' என்ற பெயரில் படமானது ஜெமினி கணேசனின் வாழ்க்கை வரலாறு

ஜெமினி கணேசனின் வாழ்க்கை வரலாறு 'காதல் மன்னன்' என்ற பெயரில் படமாகி இருக்கிறது.

2 மணி நேரம் ஓடும் இந்தப் படத்தின் முதல் பாதி, ஜெமினி கணேசனின் சிறுவயது வாழ்க்கையைச் சொல்கிறது. அதில், வேறு நடிகர்கள் நடித்துள்ளனர். சிறுவன் வளர்ந்து நடிகரான பின்னர் ஜெமினி கணேசனின் நிஜ தோற்றங்கள் வருகின்றன.

அவர், ஜெமினி நிறுவனத்தில் இயக்குநராகப் பணியாற்றியது முதல் 'காதல் மன்னன்' என்ற பட்டம் பெற்று புகழின் உச்சத்தில் இருந்து, வயதான பின் அப்பா, தாத்தா வேடங்களில் நடித்தது வரையிலான காட்சிகள் தொகுக்கப்பட்டுள்ளன.

படத்தில் முதல்வர் கருணாநிதி, கமல் ஹாசன், இயக்குநர் கே.பாலசந்தர், நடிகைகள் அஞ்சலிதேவி, சரோஜாதேவி, சௌகார்ஜானகி, நடிகர்கள் நாசர், சோ ஆகியோர் ஜெமினி கணேசன் பற்றிப் பேசியிருக்கிறார்கள்.

இந்தப் படத்துக்கு தாயன்பன் இசையமைத்து இருக்கிறார். ஜெமினி கணேசனின் மகள் டாக்டர் கம[illegible] இந்தத் [illegible]ரித்து இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெற்செய்கை கட[illegible]க்கு 61 [illegible] தெரிவு

யாழ்ப்பாணம்,செப்.12

சாவகச்சேரி கல்வயல் கமக்கார அமைப்பைச் சேர்ந்த 61 நெற்செய்கையாளர்களுக்கு நெற்செய்கை கடன் வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 9 மணிக்கு இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் எஸ். சந்திரகுமார் நெற[illegible]ளர்களுக்கு கடன் தொகையை வழங்கவுள்ளார்.

வடக்கின் வசந்தம திட்டத்தின் கீழ் சாவகச்சேரி பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி கு.ஜெகதீஸ்வரி முன்னிலையில் கடன் தொகை வழங்கப்படவுள்ளதாக அமைப்பின் தலைவர் வீ.கே.வேதநாயகம் தெரிவித்தார். (1-207)


**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

ஒருவாரகால முழுநேரகற்கைநெறிகள்.

**Diploma in Graphic Designing**
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள மென்பொருட்களான
Adobe Photo shop+Corel Draw
Macro Media Flash+Cool 3D Studio

**Diploma in Hardware Engineering**
Assembling+Upgrading+Troubleshooting+Repairing
Servicing+Software Installation+Config Networking Ect..

**Diploma in Video Editing**
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள மென்பொருட்களான
Adobe Photoshop+Cool 3D Studio+VCD cutter
Capturing+Pinnacle Studio+Adobe premeir

வகுப்புக்கள் ஆரம்பம்:- 14/09/2009 Am


## இணைப்புப் பெற்ற ஆசிரியர்கள் ஒன்றுகூடல் இன்று

அச்சுவேலி,செப்.12

வவுனியா கல்வி வலயத்துக்கு இணைப்பு செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கான விசேட ஒன்றுகூடல் புதிய உயர் கல்லூரியில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

வவுனியாவுக்கு இணைப்பு பெற்றுள்ள ஆசிரியர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு இணைப்பு பெற்ற ஆசிரியர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (1-11)


அச்சுவேலி சிவஸ்ரீ ச.குமாரசாமிக் குருக்கள் இயற்றிய
சிவாகமசேகரம், சிவலிங்கப் பிரதிஷ்டாவிதி

**நூல் வழங்கும் வைபவம்**

காலம்: இன்று (12.09.2009) ஆவணித் திங்கள் 27 ஆம் நாள் சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணி
இடம்: அகில இலங்கை இந்து மாமன்ற யாழ்.பிராந்திய நிலைய மண்டபம் கோயில் வீதி, நல்லூர்.
தலைமை: சிவஸ்ரீ ஐ.மகேஸ்வரக்குருக்கள் (குருபீடாதிபதி, சுதுமலை)
பிரதம விருந்தினர்: உயர்திரு.கே.கணேஷ் (யாழ்ப்பாணம் அரச அதிபர்)
சிறப்பு விருந்தினர்: திரு.ஆறு.திருமுருகன் (உபதலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்)

அனைத்து சிவாச்சாரியார்களையும் அன்புடன் அழைக்கின்றோம். தங்கள் அன்பான வரவை எதிர்பார்க்கும்.

(88805) விழாக்குழுவினர்.



Maths/Bio/Commerce/Arts எப்பிரிவிலேனும்
A/L செய்தவரா நீங்கள்?

நீங்களும் செய்திடலாம் BIT Degree !

BIT Bachelor of Information Technology [BIT]
(University of Colombo)

அதிசிறந்தவற்றையே தருகிறோம், ஏனெனில் நீங்கள் எம்மவர்கள் !



உடன் தொடர்பு கொள்க: 0772365461, 0772365460

IDM Jaffna - No.216, Navalar Road, Jaffna.


## இரத்ததான முகாம் நாளை

யாழ்ப்பாணம்,செ.12

கோண்டாவில் லயன்ஸ் கழகம் அந்தப் பிரதேச பொது அமைப்புகளுடன் இணைந்து நடத்தும் இரத்ததான முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

உயிர் காக்கும் உன்னத பணியில் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்குமாறு லயன்ஸ் கழகம் கேட்டுள்ளது. (204)


**வேலை ஆள்கள் தேவை**
பரிமாறுபவர், ரொட்டி மேக்கர், பார்சல் கட்டுபவர்.
ஒமெக்ஸ் ஹோட்டல்,
372, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (88804)

**விற்பனைக்கு**
Toyota Tercel Car, சாப்பாட்டு மேசை, கடைக்குரிய Counter, வீட்டுத் தளபாடங்கள் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: 873, Hospital Rd, Jaffna.
தொ.பே.இல: 0777736607

இப்பொழுது
**PC Systems**
சுன்னாகத்தில்.....
**Internet Browsing**
Diolog Sim, Mobitel Sim பெற்றுக் கொள்ளலாம்.
Mobitel Reload Sim Available
(0716333000)

| ஆலடிச் சந்தி, யாழ் வீதி, மானிப்பாய். | இல.24, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம். |
|---|---|

**Vacancy Notice**
புதிதாக ஆரம்பித்த எமது நிறுவனத்துக்கு கீழ் குறிப்பிட்ட பதவிகளுக்கு விரும்புபவர்கள் 14.09.2009 அன்று 9.00 மணிக்கு சுயவிவரத்துடன் நேரில் வரவும்.
* கணனி/கையடக்க தொலைபேசி விற்பனையாளர்
* தொலைத் தொடர்பாளர்
* கணனி வடிவமைப்பாளர்

Vengadesvara Enterprises
Main Street, Chankanai.
T.P: 012 - 7429060



# இன்று முதல்.....

சந்தை விலையில்.....

the SUNDAY TIMES ரூ.50/=

Vijey விஜய ரூ.15/=

**எமது விற்பனை முகவர்கள்....**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம், பேருந்து நிலையம் | - பூபாலசிங்கம் புத்தகசாலை |
| யாழ்ப்பாணம், சிவன் கோவிலடி | - உமா ஸ்ரோஸ் |
| யாழ்ப்பாணம், 4 ஆம் குறுக்குத்தெரு | - R.இராமச்சந்திரன் நியூஸ் ஏஜென்ட் |
| நல்லூர், பருத்தித்துறை வீதி | - சிவானந்த கபே |
| திருநெல்வேலி, பரமேஸ்வரா சந்தி | - சிவன் ஸ்ரோஸ் |
| திருநெல்வேலி, அம்மன் வீதி | - கஜன் குறூப் |
| கொக்குவில், காங்கேசன்துறை வீதி | - பாக்கியா ஸ்ரோஸ் |
| இணுவில், காங்கேசன்துறை வீதி | - தனபாலசிங்கம் நியூஸ் ஏஜென்ட் |
| சுன்னாகம், மத்திய பேருந்து நிலையம் | - துர்க்கா ஸ்ரேசனர்ஸ் |
| பண்டத்தரிப்பு, கீரிமலை வீதி | - சிறி முருகன் புத்தகசாலை |
| சண்டிலிப்பாய், சீரணி சந்தி | - R.S. Communications |
| மானிப்பாய், ஆலடிச் சந்தி | - மெடிலாண்ட் |
| கோப்பாய், இருபாலை சந்தி | - Lycky Fancy House |
| ஆவரங்கால், புத்தூர் | - கிருஸ்ணா மல்டி சொப் |
| நெல்லியடி, கரவெட்டி | - மொடர்ன்ஸ் ஸ்ரோஸ் |
| பருத்தித்துறை, பிரதான வீதி | - கவிதா ஸ்ரோஸ் |
| சாவகச்சேரி, கண்டி வீதி | - மணியம் ஸ்ரோஸ் |
| மீசாலை, புத்தூர் சந்தி, கண்டி வீதி | - கஜமுகன் ஸ்ரோஸ் |
| கொடிகாமம், பேருந்து நிலையம் | - நியூ அருள்நாயகி புத்தகசாலை |

மேலதிக விபரங்களுக்கு 0714 943 854


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா நலன்புரி நிலையத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட மக்கள் நேற்று பஸ்கள் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டனர். பஸ்களில் இருந்து இறக்கப்பட்டு கைதடி சித்த மருத்துவத்துறை விடுதிக்கு அவர்கள் கூட்டிச் செல்லப்படும் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள்: ஈஸ்வரா)

# ஐரோப்பிய ஒன்றியம் கைவிட்டாலும் வேறு நாடுகள் இலங்கைக்கு உதவும்

## நிலைமையை சமாளிக்கலாம் என்கிறார் பாலித



லண்டன், செப்.12

இலங்கைக்கான ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை நிறுத்துமாறு ஐரோப்பிய ஒன்றியம் பரிந்துரை செய்துள்ளதைக் கடுமையாகச் சாடியுள்ள வெளிவிவகார அமைச்சின் முன்னாள் செயலாளர் பாலித கோஹன்ன, சீனா, ஈரான், கொரியா, இந்தியா போன்ற நாடுகளின் உதவியிருப்பதால் இந்த இழப்பை சமாளிக்க முடியுமெனக் குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் குற்றம் கண்டுபிடிக்கும் மனப்பான்மையை இது புலப்படுத்துகின்றது எனத் தெரிவித்துள்ள பாலித கோஹன்ன, பொருளாதார வலு கிழக்குக்கு மாறிவிட்டதை மேற்குலகம் புரிந்துகொள்ளவேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனின் 'த கார்டியன்' இணையத் தளத்திற்கு அளித்துள்ள பேட்டியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வர்த்தகச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் விலக்கிக் கொள்ளுமானால் அது இலங்கையுடனான உறவுகளில் திருப்புமுனையாக அமையும் என 'த கார்டியன்' குறிப்பிட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் வரிச்சலுகையை இழக்கப் போவதை இலங்கை அரசு உணர்ந்துள்ளது. அரசு மேற்குலகுக்கு எதிரான தனது கருத்துகளில் சிக்கியுள்ளதால் அதனை மேற்குலகுக்கு விட்டுக்கொடுப்பது போன்று தோற்றமளிக்க முடியாது என மேற்குலக இராஜதந்திரியொருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக 'த கார்டியன்' மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கைக்கு வழங்கப்படும் ஜி.எஸ்.பி. வர்த்தகச் சலுகையை நிறுத்துமாறு பரிந்துரைத்தமைக்காக ஐரோப்பிய ஒன்றியத்தைக் கடுமையாகச் சாடியுள்ள இலங்கையின் மூத்த இராஜதந்திரி பாலித கோஹன்ன, ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையைத் தண்டிக்க முனைகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நாவுக்கான இலங்கைத் தூதுவராகப் பணியாற்றவுள்ள பாலித கோஹன்ன, ஜி.எஸ்.பி. வர்த்தகச் சலுகை இழப்பை இலங்கையால் சமாளிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

ஐரோப்பாவிற்கு 7 ஆயிரத்து 200 வகையான பொருள்களைத் தீர்வையற்ற விதத்தில் ஏற்றுமதி செய்வதற்கு இலங்கை அரசுக்கு இந்த வர்த்தகச் சலுகை உதவுகின்றது. எனினும், இந்த வர்த்தகச் சலுகை கிடைப்பது மனித உரிமைத் தராதரங்கள் எவ்வாறு மதிக்கப்படுகின்றன என்பதிலேயே தங்கியுள்ளது.

**ஐரோப்பிய ஒன்றித்தின் அற்ப குணம்**

அரச ஆதரவுடன் செயற்படும் தமிழ் ஆயுதக்குழுக்கள் சிறுவர்களைக் கடத்துவதுடன் சித்திரவதை மற்றும் பொதுமக்களைக் கொலை செய்கின்றனர் என்று ஐரோப்பிய ஒன்றியம் குற்றஞ்சாட்டியுள்ளது.

எனினும், பாலித கோஹன்ன கார்டியனுக்கான பேட்டியில் ஐரோப்பிய ஒன்றியம்தான் கடந்த காலம் குறித்தா அல்லது எதிர்காலம் பற்றியா அக்கறை கொண்டுள்ளது எனத் தீர்மானிக்கவேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

இலங்கையை, ..னித உரிமை மீறல்களுக்காகத் தண்டிப்பதன் காரணமாக ஆடைத் தொழில்துறையைச் சேர்ந்த பெண்கள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் பாதிக்கப்படுவர் என பாலித கோஹன்ன சுட்டிக்காட்டினார்.

ஐரோப்பிய ஒன்றியம் குற்றம் கண்டுபிடிக்கும் அற்ப குணத்துடனான அணுகுமுறையை பின்பற்றுவதை இது புலப்படுத்துகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையால் ஆசிய பொருளாதாரங்களில் புதிய சந்தைகளைக் கண்டுபிடிக்க முடியும். எம்மால் இழப்புகளை சமாளிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''பொருளாதார வலு மேற்கிலிருந்து கிழக்கிற்கு மாறிவிட்டதை மேற்குலக நாடுகள் புரிந்துகொள்ளவேண்டும். கிழக்கில் புதிய சந்தைகள் உருவாகின்றன. சீனா, ஜப்பான், கொரியா, ஈரான், இந்தியா போன்றன எமது நண்பர்கள், உறவினர்கள்'' என்றார் அவர்.

''எனினும், நாங்கள் மேற்குலகின் அழுத்தங்களால் குழப்பமடையவில்லை. உலகம் முழுவதும் இலங்கைக்குப் போதியளவு நண்பர்கள் உள்ளனர். முன்னரைப் போன்று நிதி வளங்களும், அதிகாரமும் ஓரிடத்தில் குவிந்திருக்கவில்லை என்பதை நீங்கள் உணரவேண்டும்'' என பாலித கோஹன்ன - தெரிவித்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-சி)

# உடுவில் மகளிர் கல்லூரி மாணவர் பகிஷ்கரிப்பு மூன்றாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது

வலி.வடக்கு,செப்.12

உடுவில் மகளிர் கல்லூரியின் அதிபரைப் பதவி நீக்கம் செய்ததைக் கண்டித்து கல்லூரி மாணவிகள் மேற்கொண்டு வரும் பகிஷ்கரிப்புப் போராட்டம் மூன்றாவது நாளாக நேற்றும் தொடர்ந்து நடைபெற்றது.

கடந்த திங்கட்கிழமை பகிஷ்கரிப்புப் போராட்டத்தை ஆரம்பித்த மாணவிகள் மறுநாள் பாடசாலைக்கு சமுகமளித்தனர். மீண்டும் புதன்கிழமை ஆரம்பித்த பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்றும் தொடர்ந்து நடைபெற்றது.

அதேவேளை-

மாணவிகளின் பெற்றோர் நேற்றுமுன்தினம் கூடி ஆராய்ந்து அமைத்துள்ள நடவடிக்கைக் குழு இன்று பிற்பகல் 3 மணிக்கு உடுவிலில் கூடவிருக்கின்றது.

அடுத்து எடுக்க வேண்டிய மாற்று நடவடிக்கைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராய்ந்து முக்கிய முடிவுகள் எடுக்கப்படவிருக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டது

# நியூஸிலாந்தை வீழ்த்தியது இந்தியா!

கொழும்பு,செப்.12

இலங்கையில் நடைபெற்றுவரும் முக்கோணத் தொடரின் நேற்றைய ஆட்டத்தில் நியூஸிலாந்து அணியை இந்தியா 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

கொழும்பில் நேற்று பகலிரவு ஆட்டமாக நடைபெற்ற இந்தப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி களமிறங்கிய நியூஸிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர்கள் எவரும் பெரிதாகச் சோபிக்கத் தவறியதால் 46.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் 156 என்ற சிறிய வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, சிறிதும் தடுமாறாது நிதானமாக ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இறுதியில் 40.3 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 156 ஓட்டங்களைப் பெற்று, 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. ஆட்ட நாயகனாக நெஹ்ரா தெரிவுசெய்யப்பட்டார். இந்தப் போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்றதன் மூலம், இறுதிப் போட்டிக்கு இலங்கை அணியும், இந்தியாவும் தெரிவாகியுள்ளன.

# குடிவரவுத் திணைக்களத்தின் அலுவலகம் வடக்கு-கிழக்கில்

கொழும்பு, செப். 12

குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் இரண்டு அலுவலகங்களை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இம் மாகாணங்களில் தற்போது நிலவி வரும் அமைதியற்ற சூழ்நிலையை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது என குடிவரவு - குடியகல்வுத் திணைக் களத்தின் கட்டுப்பாட்டாளர் பி.பீ.அபய கோன் தெரிவித்தார்.

இந்த அலுவலகங்கள் திறக்கப்பட்ட பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்கள் இலகுவாக கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, மோசடிகளைத் தடுப்பதற்காக கடவுச்சீட்டுகளில் கைவிரல் அடையாளத்தை உள்ளடக்குவது தொடர்பாக கவனம் [illegible] றும் அவர் [illegible]

# இரத்தம் அவசரம் தேவை

யாழ்ப்பாணம், செப்.12

யாழ்.போதனா வைத்தியசாலையில் $A^+$, $B^+$, $O^+$ ஆகிய குருதி வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. எனவே இரத்த தானம் செய்ய விரும்புகின்றவர்கள் கொடுத்துதவுமாறு இரத்த வங்கி அதிகாரி கேட்டுள்ளார். (1-5)

# நயினையில் மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம், செப்.12

நயினாதீவு நாகபூஷணி அம்மன் அறங்காவலர் சபையின் ஏற்பாட்டில் மருத்துவ முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நயினாதீவில் இடம்பெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர் குழு இந்த முகாமை நடத்தவுள்ளது.

# பாதுகாப்பற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பற்ற பிரதேசங்களுக்கோ அல்லது குடியிருப்பாளர்கள் இல்லாத வீடுகளுக்கோ பிரவேசிப்பதை தவிர்க்குமாறு முன்னர் பல தடைவைகள் அறிவுறுத்தப்பட்டிருப்பினும் தற்போது மக்களுக்கு கிடைத் திருக்கும் சுதந்திரம் காரணமாக வழங்கப்பட்ட ஆலோசனைகள் மறந்துவிட்ட நிலையிலோ அல்லது கவனக் குறைவாகவோ இருப்பது காணக்கூடியதாக இருக்கிறது. பயங்கரவாதிகளால் புதைக்கப்பட்ட குறிப்பாக இராணுவத்தினால் சோதனையிடப்படும் பாழடைந்த வீடுகள், இராணுவ முகாமை அண்டிய பிரதேசங்கள், இராணுவத்தினர் பயணிக்கும் வீதிகள் ஆகியவற்றில் கண்ணி வெடிகள் இன்னும் இருக்கலாம்.

இம்மாதம் முதலாம் திகதி (01.09.2009) அச்செழு பிரதேசத்தில் சிறுவர்கள் மூவர் மர்மப்பொருள் ஒன்றைக் கண்டெடுத்து அதனுடன் விளையாடிய போது மர்மப் பொருள் வெடித்ததில் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டதுடன் மற்றைய இருவரும் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள். உங்கள் பிள்ளைகள் இவ்வாறான துரதிஷ்டமான விபத்துக்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வதும் அவர்களை அறிவுறுத்துவதும் பெற்றோரான உங்கள் பொறுப்பாகும்.

யுத்த சுவாலைகள் அணைந்திருப்பினும் சாம்இருக்கும் கண்ணி வெடி களில் இருந்தும் நாட்டின் சந்ததிகளைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டியது எமது பொறுப்பாகும். சாம்பலுக்குள் இருக்கும் அனல் மீண்டும் எரிய முற்படுவது போல உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் புலிகளின் ஆதரவாளர்களிடம் இருந்தும் நம் நாட்டு சந்ததிகளை பாதுகாத்துக்கொள்ள வேண் [illegible] ததை விரும்பும் பெற்றோரின் கடமையாகும்.

மூன்று தசாப்த யுத்தத்தில் கொல்லப்பட்ட மனித உயிர்கள் அளவிட முடியாதவை. எல்.ரி.ரீ.ஈ. பயங்கரவாதிகள் நாட்டுக்கு விட்டுச்சென்ற வலது குறைந்தவர்களின் எண்ணிக்கையும் மிகமிக அதிகம். அனைத்து இலங்கையர்களும் இறைமையுள்ள நாட்டில் வாழக்கூடிய சூழலை நாம் ஏற்படுத்தியுள்ளோம். மேலும் கண்ணி வெடிகளை அகற்றி சுதந்திரமாக நடமாடக்கூடிய சூழலை ஏற்படுத்தித் தரும் வரை பொறுமையுடன் செயற்படுமாறு இராணுவம் பொது மக்களிடம் பண்புடன் கேட்டுக் கொள்கிறது.

எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளை அழித்து வடக்கின் மக்களுக்கு சுதந்திரமாக வாழக் கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருப்பினும் கொடூர பயங்கரவாதிகளால் புதைக்கப்பட்ட ஆயுதங்கள், வெடி பொருள்கள் உட்பட எல்.ரீ.ரீ.ஈ. தனது தோல்விக்கு மத்தியில் இராணுவத்தினரின் முன்னேற்றத்தையும்தடுப்பதற்காக பொதுமக்களைப் பற்றி கவனத்தில் கொள்ளாது புதைக்கப்பட்ட நிலக் கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு இலங்கை இராணுவ பொறியியற் பிரிவு வெளிநாட்டு உதவியுடன் முன்னெடுத்துச் செல்லும்பாரிய வேலைத் திட்டத்தை கூடிய விரைவில் நிறைவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் பின்வாங்கிச் செல்லும் போது பொது மக்களின் வீடுகள் மற்றும் வாழ்விடங்கள் போன்றவற்றில் மிகவும் நுட்பமான முறையில் பொருத்திச் சென்ற கண்ணி வெடிகளையும் நிலக் கண்ணிகளையும் அகற்றுவதற்கு குறிப்பிட்ட காலம் தேவைப்படும். ஆகவே இடம் பெயர்ந்தவர்களை மீளக்குடியேற்றி அவர்களை சுதந்திரமாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்துவற்கு கண்ணி வெடிகள் பாரிய தடையாக இருக்கின்றன - என்று உள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

ஒன்பது பஸ்களில் நேற்றிரவு 7.30 மணியளவில் கைதடிக்கு வந்து சேர்ந்த மக்களை அரச அதிபர் கே.கணேஷ் பார்வையிட்டு அவர்களுக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

பிரதேச செயலக ரீதியாக அவர்கள் பிரதேச செயலர்கள் ஊடாக மீள்குடியமர்த்தப் பட உள்ளனர்.

ஏனையோர் படிப்படியாக வவுனியாவில் இருந்து அழைத்து வரப்பட்டு மீள் குடியமர்த்தப்பட இருக்கின்றனர் என்று அரச அதிபர் தெரிவித்தார். (அ-1-7-120-131-86)

## வன்னி அகதிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெயர்ந்த மக்கள் மூன்றுலட்சம்பேரை அரசு தங்கவைத்த முக்கிய அகதிமுகாமுக்கு தன்னால் காலவரை யின்றி தொடர்ச்சியாக நிதி வழங்க முடியா தென ஐ.நா. தெரிவிக்கின்றது. மோதல்கள் காரணமாக வெளியேறிய தமிழர்கள் மெனிக்பாம் முகாமில் தங்கவைக்கப் பட் டுள்ளனர்.

அவர்களுக்கு விடுதலைப்புலிகளுடன் தொடர்புள்ளதா என்பது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என இலங்கை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த மக்களை கூடியவிரைவில் அவர்களுடைய பகுதிகளுக்குச் செல்ல அனுமதிக்கவேண்டுமென ஐ.நா. வேண்டுகோள் விடுத்துவருகின்றது.

இந்த முகாம்களுக்கு நிதியுதவி வழங்கி அவற்றை நிர்வகிப்பதற்கு ஐ.நா. அமைப்புகள் உதவுகின்றன.

எனினும் அவர்கள் பொறுமையிழப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

முடிந்தளவிற்கு அதிகளவானவர்களை கூடிய விரைவில் முகாமிலிருந்து செல்வதற்கு அனுமதிப்பதே சிறந்த தீர்வாக அமையும் என இலங்கைக்கான ஐ.நா.வின் வதிவிடப் பிரதிநிதி நீல் புஹ்னே தெரிவித்தார்.

விடுதலைப்புலிச் சந்தேகநபர்கள் என அரசு தெரிவிக்கும் பத்தாயிரம் தமிழர்களைச் சென்று பார்ப்பதற்கு சர்வதேச செஞ்சிலுவைக் குழுவுக்கு அனுமதி மறுக்கப்படுவது குறித்தும் நீல் புஹ்னே கண்டனம் வெளியிட்டுள்ளார். (அ-சி)

## தயாமாஸ்ரரும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதியான சரீரப்பிணையில் செல்வதற்கு இவர்கள் இருவருக்கும் அனுமதி வழங்கினார்.

அத்துடன் இருவரும் நாட்டை விட்டுசெல்லக்கூடாது, இருவரது கடவுச்சீட்டுகளும் நீதிமன்றிடம் ஒப்படைக்கப்படவேண்டும, இருவரும் ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் குற்றப்புலனாய்வு பொலிஸ்பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி கையொப்பமிட வேண்டும் என்றும் நிபந்தனைகள் விதித்தார்.

இவர்கள் இருவரும் கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி முல்லைத்தீவு - புதுமாத்தளனில் இராணுவத்தின் 58 ஆம் பிரிவினரிடம் சரணடைந்திருந்தார்கள். பின்னர் கொழும்புக்கு கொண்டுவரப்பட்ட இவர்கள் இதுவரை குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸாரால் விசாரிக்கப்பட்டு வந்தனர்.

இந்த நிலையில் இவர்கள் இருவரும் நேற்று குற்றப்புலனாய்வுப்பிரிவு பொலிஸாரால் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரையும் மன்றில் ஆஜராக்கிய குற்றப் புலனாய்வுப் பொலிஸார், இவர்கள் மீதான புலனாய்வு விசாரணைகள் அனைத்தும் முடிவடைந்து விட்டன என்றும், இவர்கள் பிணையில் விடுவிக்கப்படுகின்றமையை தாம் ஆட்சேபிக்கவில்லை என்றும் நீதிவானுக்குத் தெரிவித்தனர்.

இதையடுத்தே பிரதான நீதிவான் நிஸாந்த ஹப்பு ஆராச்சி இருவரையும் பிணையில் விடுவிப்பதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

## யுனிசெவ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் 'த சிட்னி மோனிங் ஹேரல்ட்' என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தப் பத்திரிகை யில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

இனந்தெரியாத நபர்களிடமிருந்து ஜேம்ஸ் எல்டெரின் கைத்தொலைபேசிக்கு அவரது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கும் விதத்தில் குறுந்தகவல் அனுப்பப்பட்டுள்ளது.

அந்தக் குறுந்தகவல்களில் தீய வார்த்தைகள் மூலமே இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

அகதிமுகாம்களிலுள்ள தமிழ் மக்கள் தொடர்பாக ஜேம்ஸ் எல்டெல் கருத்துகளை வெளியிடுபவர். இதனால், அவர் மீது புலி அனுதாபி என்ற முத்திரை குத்தப்பட்டுள்ளது. - என்றுள்ளது.

புலிகளுடனான இறுதி யுத்தத்தின்போது புலிகளுக்கு ஆதரவாக ஜேம்ஸ் எல்டன் கருத்து வெளியிட்டார் என அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

அத்துடன், அவரை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என அரசு உத்தரவிட்டிருப்பது தெரிந்ததே. (அ-சி)

## மேற்குநாடுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளை கடந்த மே மாதம் வெற்றிகொண்ட பிற்பாடு, ஐரோப்பிய பத்திரிகையான 'லி - பிகாரோ'வுக்கு தாம் வழங்கிய முதலாவது பேட்டியிலேயே ஜனாதிபதி இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்குலக நாடுகள் இலங்கையைக் கண்டபடி விமர்சனம் செய்வதை விட்டு இலங் கையை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்கு உதவி செய்யவேண்டும். இலங்கை மீது பூரண நம்பிக்கையும், விசுவாசமும் வைத்திருக்கவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரசார நடவடிக்கைகளுக்கு எடுபடவே கூடாது. இலங்கை இராணுவத்துக்கு எதிராக மேற் குலக நாடுகளால் முன்வைக்கப்பட்டுவரும் யுத்தக் குற்றச்சாட்டுகளை நான் முற்றாக மறுக்கிறேன்.

இலங்கை இராணுவத்தினர் யுத்தத்தின் இறுதி நாள்களின்போது ஏராளமான இழப்புகளையும், பேரழிவுகளையும் பொதுமக்களுக்கு ஏற்படுத்தி உள்ளனர் என்று மேற்குலக நாடுகளால் முன்வைக்கப்பட்டுவரும் குற்றச்சாட்டுகளை என்னால் ஏற்றுக்கொள்ளவே முடியாது. புலிகளுடன் போரிட்ட எமது இராணுவத்தினருக்கு நாம்தான் சம்பளம் வழங்கினோம். எமது இராணுவத்தினரின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்தோம். அவற்றைச் செய்தவை வெளிநாடுகள் அல்ல.

நாம் இலங்கையின் கிழக்கு மாகாணத் தைப் புலிகளிடமிருந்து மீட்டெடுத்தபோது எவ்வித மான உயிரிழப்புகளும் பொதுமக் களுக்கு ஏற்படவே இல்லை. ஆனால், புலிகளிடமிருந்து வடக்கு மாகாணத்தை மீட்டெடுத்தபோது ஒரு சில பொது மக்களுக்கு உயிரிழப்புகள் இடம்பெற்றுத்தான் உள்ளன. ஆனால் நாம் பேரழிவுகளை ஏற்படுத்தக் கூடிய கனரக ஆயுதங்களை யுத்தத்தில் பயன்படுத்தியிருந்தால் எமது இராணுவத்தினருக்கு ஏற்பட்டிருக்கும் ஏராளமான இழப்புகளை நிச்சயம் தவிர்த்திருக்க முடியும். இராணுவத்தினர் கலகத்தில் ஈடுபடக்கூடும் என்பதால் நாம் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட பேரிழப்புகள் குறித்து அன்றைய நாள்களில் பகிரங்கமாக வெளியில் சொல்லவில்லை. ஆனால் எதிர்க்கட்சிகள் அரசை விமர்சிப்பதற்கான துரும்புச்சீட்டாக இராணுவத்தினருக்கு ஏற்பட்ட பேரிழப்புகளைப் பயன்படுத்தி அர சைக் கடுமையாக விமர்சித்திருக்கின்றார்கள்.

### இரட்டை வேடம்

மேற்குலக நாடுகள் இலங்கை விடயத் தில் இரட்டை வேடம் பூண்டுள்ளன. இந் நாடுகள் அரசை மட்டுமே விமர்சிக்கின்றன. புலிகள் எவற்றை வேண்டுமானாலும் செய்யலாம் என்பது மேற்குலக நாடுகளின் நிலைப்பாடாகவே உள்ளது. புலிகள் படு கொலைகளைக் கூட செய்யலாம். இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி 1991ஆம் ஆண்டு புலிகளால் படுகொலை செய்யப்பட்டார். ஆனால், மேற்குலக நாடுகள் புலிகளின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை கண்டிப்பதும் இல்லை; கண்டுகொள்வதும் இல்லை. மேற்குலக நாடுகளின் இந்த இரட்டை வேடம் மிகவும் வெட்கக் கேடான விடயமா கும்.

### செப்ரெம்பர் மத்தியில் அகதிகள் மீள்குடியேற்றம்

நாட்டை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கையின் முதல் கட்ட மாக உள்நாட்டு யுத்தத்தால் இடம்பெயர்ந்திருக்கும் அகதிகளை தங்கள் தங்கள் சொந்த இடங்களில் மீள்குடியேற அனுமதி வழங்கவேண்டும். இந்த அகதிகள் அவர்களது சொந்த வீடுகளில் மீள் குடியேறுகின்றமையும் தங்கள் தங்கள் நிலங்களில் விவசாய நடவடிக்கைகளில் ஈடு படுகின்றமையும் முதலில் அனுமதிக்கப்படவேண்டிய - மிகவும் முன்னுரிமை கொடுக்கப்படவேண்டிய - விடயங்களாகும். அதன்பின் நாம் எமது நாட்டை நிச்சயம் அபிவிருத்தி செய்வோம்.

அகதிகளின் மீள் குடியேற்ற நடவடிக்கைகளுக்கு நிலங்களில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகள் பாரிய தடைக்கற்களாக இருகின்றன. நாம் எதிர்பார்த்ததை விட இந்த நிலக்கண்ணி வெடிகளால் ஏற்பட்டிருக்கும் தடைகள் மிகவும் பாரதூரமான வையாகும். எமது இராணுவத்தினர் இந்த நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கையில் அல்லும் பகலும் கடுமையாக ஈடுபட்டு வருகிறார்கள்.

சுமார் ஆயிரத்துக்கும் அதிகமான அகதிக் குடும்பத்தினர் தங்கள் சொந்த வீடுகளுக் குத் திரும்பிச் சென்றுள்ளார்கள். அவ்வாறே வயதானவர்களும் தங்கள் சொந்த வீடுகளுக் குத் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்பட்டுள் ளார்கள். செப்ரெம்பர் மாத நடுப்பகுதிக்குள் ஒட்டுமொத்தமாக 50 ஆயிரம் அகதிகள் முகாம்களை விட்டு வெளியேறி மீள்குடி யேற்றம் செய்யப்பட்டிருப்பர்.

### புலிகளுடனான தொடர்பை கண்டறிய வேண்டியுள்ளது

நாம் எமது மக்களை நிலக்கண்ணி வெடிகளுக்குப் பலிக்கடாக்கள் ஆக்கமுடியாது. அத்துடன் முகாம்களில் தங்கியிருப்பவர்களில் யார் சாதாரண பொதுமக்கள்? யார் பயங்கரவாதத் தொடர்புடையவர்கள் என்று பிரித்தறிய வேண்டிய தேவை எமக்கு உள்ளது. புலிகள் மக்களோடு மக்களாக அகதி முகாம்களில் தங்கியுள்ளார்கள். புலிகளைச் சுதந்திரமாக நடமாட அனுமதிக்க இயலாது. முகாம்களில் பொதுமக்களைத் தங்க வைத்திருப்பது எமது தவறு அல்ல. அகதிகளில் எத்தனைபேர் புலித் தலைவர்களுடன் தொடர்பு உடையவர்கள் என்று கண்டறிய வேண்டியுள்ளது.

அகதிகள் மீள் குடியேற்றத்தை தொடர்ந்து நான் அவசரகாலச் சட்டத்தை முடிவுக் குக் கொண்டுவரவும் நடவடிக்கை எடுப்பேன்.

### ஜனாதிபதித் தேர்தல்

நான் அடுத்த வருட ஆரம்பத்தில் - இயலுமான விரைவில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வுள்ளேன். நாம் அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தயாராக உள்ளோம். 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு கொஞ்சம் அப்பாலும் செல்லத் தயாராக உள்ளோம்.

யுத்தத்தின் காரணமாகவே 13 ஆவது திருத் தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடிய வில்லை. தமிழ்த் தலைவர்கள் எப் போதும் அதிகமாகவே கேட்கிறார்கள். ஆனால் பொது மக்கள் எப்போதும் சமாதானம், பாதுகாப்பு, அபிவிருத்தி ஆகியவற்றையே அடைய விரும்புகிறார்கள். பொதுமக்களுக்கு யுத்தத்தில் ஒருபோதும் விருப்பமே இல்லை.

### 'சனல் - 4' வீடியோ

'சனல் - 4' வீடியோ காட்சிகள் பொய்யானவை, போலியானவை என்பதை நிரூபிப்பதற்கு எம்மிடம் போதுமான ஆதாரங்கள் உள்ளன. புலிகள் வேண்டுமென்றே இராணுவ சீருடையை அணிந்து இவ்வாறான ஒரு வீடியோ காட்சியை எடுத்திருக்கின்றார்கள். புலிகள் இராணுவத்தினரின் உடைகளைப் பயன்படுத்தி இவ்வாறான பிரசார நடவடிக்கைகளை இலங்கைப் படையினருக்கு எதிராக முடுக்கி விட்டிருப்பது இது முதல் தடவை அல்ல.

மேற்குலக நாடுகளுக்கு எதிரான நாடுகளுடன் மட்டும் நான் நட்புப் பாராட்டு கிறேன் என்பது உண்மையல்ல.

மேற்குலக நாடுகளுடனும் நல்ல நட்புகளைப் பேணவே விரும்புகிறேன். ஆனால் மேற்குலக நாடுகள் எனக்கு அழைப்பு விடுக்க வில்லை. எனது நட்பைக் கோரும் நாட்டுடன் நானும் நெருக்கமாகவே செயற்படுவேன். அணிசேரா அமைப்பின் ஸ்தாபகர்களுள் இலங்கையும் ஒன்று. இவற்றின் காரணமாகவே லிபியா, வெனிசுலா ஆகிய நாடுகளுக்கு நட்பு பாராட்டிச் சென்றுள்ளேன். நான் சந்தர்ப்பம் கிடைக்கும்போது இந்தியாவுக்கும் செல்லவுள்ளேன் - என்றார்.

## 'சனல்-4'....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றிய மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவே இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

### பொய்யாகத் தயாரிக்கப்பட்டது

'சனல் - 4' நிறுவனம் ஒளிபரப்பிய இளைஞர்கள் சிலரை இராணுவத்தினர் சுட்டுக் கொல்வது போன்ற வீடியோக் காட்சி தொடர்பாக ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் நாம் தீவிர விசாரணைகளை மேற்கொண்டோம்.

அதன்படி இக்காட்சி தொடர்பாக நான்கு வெவ்வேறான விசாரணைகளை நாம் மேற்கொண்டோம். நான்கு விசாரணைகளிலும் இக்காட்சி பொய்யாகத்தான் தயாரிக்கப்பட்டது என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

எமது நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் இந்தச் சம்பவம் எமக்கு முதல் அனுபவம் அல்ல. பல தடவைகள் இவ்வாறான கசப்பான அனுபவங்களை நாம் சந்தித்திருக்கிறோம். அவற்றை மதிநுட்பமாகக் கையாண்டு வெற்றியும் பெற்றோம். அந்த வகையில் தற்போதைய விடயத்திலும் நாம் வெற்றிபெற்றுள்ளோம்.

இந்த வீடியோக் காட்சி பொய்யென நிரூபிக்கப்பட்டதும் இதன் அறிக்கைகளையும் நிரூபிக்கப்பட்ட வீடியோக் காட்சிகளையும் நாம் ஐ.நா. செயலாளர், எரிக் சொல்ஹெய்ம், ஐ.நாவின் படுகொலை தொடர்பான நிபுணர் ஆகியோருக்கும் அனுப்பிவைத்துள்ளோம்.

அதேபோல் சனல் - 4 நிறுவனத்துக்கும் அனுப்பிவைத்துள்ளோம். அந்த நிறுவனம் நிரூபிக்கப்பட்ட வீடியோ காட்சியை அப்படியே ஒளிபரப்பி எம்மிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கவேண்டும். அவ்வாறு செய்யாதுவிட்டால் மாற்று வழிகளைப் பயன்படுத்தி அந்நிறுவனத்துக்கு எதிராக நாம் கடும் நடவடிக்கை எடுப்போம்.

### கடும் நடவடிக்கை எடுப்போம்

அதேபோல், பி.பி.ஸி., சி.என்.என்., அல் - ஜெஸீரா போன்ற தொலைக்காட்சி நிறுவனங்களும் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் மிகவும் பொறுப்புடனும் அவதானத்துடனும் செயற்பட வேண்டும்.

எமது நாட்டவருக்கும் புலிப் பயங்கரவாதத்தை வெற்றிகொண்டு நாட்டில் அமைதியை நிலைநாட்டிய படையினருக்கும் எதிராக சேறுபூசயார் முற்பட்டாலும் நாம் அதை அனுமதிக்க மாட்டோம். அவ்வாறான நடவடிக்கைகளை நாம் முறியடித்தே தீருவோம்.

இந்த நாட்டின் மீது யாரும் கரும்புள்ளி குத்துவதை இந்நாட்டு மக்கள் எவரும் ஒருபோதும் விரும்பமாட்டார்கள் - என்றார். (அ-சி)


**6,7 ENGLISH MEUIUM**

விசேடமான ஆசிரியர்களால், பிரத்தியேகமான வழிகாட்டலுடன், தமிழ்மொழி மூல பாடங்கள் உள்ளடங்கலாக சிறப்பாக வகுப்புகள் நடைபெறுகின்றன. ஆறு பரீட்சைகள், கணிப்பீட்டறிக்கை, பரிசில் வழங்கல், பெற்றோர் சந்திப்பு. அனுமதிகள் இன்றுமுதல் பெற்று பாடசாலையில் முன்னணி மாணவர்களாகுங்கள்

தரம்:- 4 முதல் தரம் 10 வரை தமிழ் மொழி மூல வகுப்புகளுக்கான அனுமதிகளும் வழங்கப்படுகின்றன.

**சயன்ஸ் அக்கடமி**

நல்லூர் - அரியாலை.

**புதிய உயர் கல்லூரி**

தவிர்க்க முடியாத காரணத்தினால் 12/09/2009 - 13/09/2009 (சனி, ஞாயிறு) விரிவுரைகள்யாவும் நடைபெறமாட்டாது.

அடுத்த சனி, ஞாயிறு வழமைபோல் சகல விரிவுரைகளும் நடைபெறும்.

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். நிர்வாகி.

**LAVA HOSPITAL**

75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333

ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வு கூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்'

★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
**Obesity package - 1200/=**

**SHAMROCK**
ஈச்சமோட்டை, யாழ்
A/L 2010 & 2011
A/L கலை வர்த்தக, கணிதப் பிரிவுகள்
★ தமிழ் - S.சிவா, B.A.
★ அரசியல் - S.ஸ்ரீரஞ்சிதன், B.A.
★ நாடகம் - J.ஜோன்சன், B.A.
★ இந்து. { A.மல்லிகா, B.A. / U.L.மேரி, B.A.
★ புவி. - A.ராஜா, B.A.
★ அளவை - R.ரமணன், B.A.
★ இந்து. - S.கார்த்திக், B.A.
பேச, எழுத, வாசிக்க
★ SPOKEN ENGLISH ★ சிங்களம்
(புதிய பிரிவுகள்)

**நாளை ஆரம்பம்**
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
**A/L 2010**
கலைப்பிரிவு
வினா விடை வகுப்பு
Tamil - திரு.குழந்தை
Eco. - திரு.B.கஜீதரன்
Log. - திரு.S.S.சந்திரன்
Hic. - திரு.பத்மராஜா
Geo. - திரு.சுரேன்
Hin. - திரு.N.G.தரன்
Hist - திரு.தாஸ்
Pl sc - திரு.ஸ்ரீரங்கநாத்
Drma. - திரு.மயூரன்
Chri. - திரு.ஜுட்

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE JAFFNA
**2010 A/L PHYSICS**
மின் புலம்
ஆரம்பம்:- 12.09.2009
பிரிவு - I Sat, Sun - 8.00 - 9.00
பிரிவு - II Sat, Sun - 4.30 - 5.30
By: செல்வன்

**PHYSICS செல்வன்**
அனைத்து வகுப்புகளும் வழமையான நேர அட்டவணைப் படி
இன்று முதல்
THE SCIENCE CORNER
இல் நடைபெறும்

இன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பமாணி இறுதிப்பரீட்சைக்கு (BIT - Semester 6) பரீட்சைக்கு தோற்றும் MCS நிறுவன மாணவர்கள் அனைவர்க்கும் வாழ்த்துக்கள்.
- Semester 1, 3, 5 மாணவர்களும். விரிவுரையாளர்களும்.

BIT?
☞ கொழும்பு பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் வெளிவாரிக்கற்கை நெறி.
☞ A/L 2009 தோற்றியோரும் விண்ணப்பிக்கமுடியும்.
☞ A/L சித்தியடையத்தவறின் FIT எனும் கற்கை நெறியில் சித்தியடைவதன் மூலம் கற்கைநெறியைத் தொடரமுடியும்.
☞ DIT 1ம் ஆண்டின் முடிவிலும், HDIT 2ம் ஆண்டின் முடிவிலும் கொழும்பு பல்கலைக் கழகத்திடமிருந்து பெறலாம்.
☞ கற்கை நெறியை எந்தவொரு பல்கலைக்கழக மாணவனும் வெளிவாரியாக பயில முடியும்.

MCS?
☞ ஐநா அபிவிருத்தி திட்ட ஆதரவுடன் 1999ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம்.
☞ BIT கற்கை நெறியை கடந்த 6 ஆண்டுகளாக வடமாகாணத்தில் தொடர்ச்சியாக நடாத்தி வரும் நிறுவனம். ஆதாரம் கொழும்பு பல்கலைக்கழக BIT கைநூல்.
☞ BIT கற்கை நெறியின் சிறப்பான (எமது யாழ் மாணவர்களின்) செயற்பாட்டிற்காக கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருதினை பெற்றுக்கொண்ட நிறுவனம்.
☞ ICDL, MICROSOFT, CISCO, IBM, SUNMICROSYSTEM, CIW, DELL, COMTIA மற்றும் CIMA நிறுவனங்களின் அங்கீகாரம் பெற்ற பயிற்சிமையமாகவும், பரீட்சை நிலையமாகவும் தொழிற்படும் நிறுவனம்.

BIT @ MCS?
மாணவர்களை பல்திறன் வாய்ந்தவர்களாக உருவாக்கும் வகையில் BIT மாணவர்களுக்கு
- ICDL (International Computer Driving License)
- MCP (Microsoft Certified Professional)
- MCTS (Microsoft Certified Technology Specialist)
- SCJP (Sun Certified Java Programmer) கற்கை நெறிகளுக்கு 100%off
- MCSE (Microsoft Certified Systems Engineer)
- CCNA (Cisco Certified Network Associate) கற்கை நெறிகளுக்கு 50% off.

MCS 324, பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி அருகில், யாழ்ப்பாணம்.
Supported By UNDP/UBRP
Phone: 0772-395 895
Bus Route - 764
பதிவுகள் 15.09.2009 க்கு முன்னர்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] யார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.09.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org